இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 38 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 30 – சனிக்கிழமை 16 செப்டம்பர் 2023 – சென்னை 20 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 38: Thiruvalluvar Year - 2054 - Aavani 30 - Saturday 16 September 2023 - Chennai 20 Pages ₹ 5.00






தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான நேற்று (15.9.2023) காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/- வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து, 13 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், க.சுந்தர் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம். மகாலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி. எழிலரசன், கு. செல்வப்பெருந்தகை, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மகளிர்க்கு மாதம் 1000 ரூபாய் என்பது

# உதவி அல்ல; உரிமை ஆகும்!

## 1 கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் பயன்பெறும் - ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை’ - காஞ்சியில் தொடங்கி வைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**காஞ்சிபுரம், செப். 16-**

**காஞ்சிபுரத்தில் நேற்று, தமிழ்நாட்டில் 1 கோடிக்கும் மேலான மகளிர்க்குப் பயனளிக்கும், கழக அரசின் ‘கலைஞர் உரிமைத் தொகை திட்டத்தை’ தொடங்கி வைத்து எழுச்சியுரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “மகளிர்க்கு மாதம் 1000 ரூபாய் என்பது, உதவி அல்ல; உரிமை ஆகும்!” என்று உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான நேற்று (15.9.2023) காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு:-

“தலைவர் என்பார் –
தத்துவ மேதை என்பார்
நடிகர் என்பார், நாடக வேந்தர் என்பார்
சொல்லாற்றல் சுவைமிக்க எழுத்தாற்றல் பெற்றார் என்பார் –
மனிதரென்பார், மாணிக்கமென்பார் –
மாநிலத்து அமைச்சரென்பார் –
அன்னையென்பார், அருள்மொழிக் காவல் என்பார்
அரசியல்வாதி என்பார்,
அத்தனையும் தனித்தனியே சொல்வதற்கு நேரமற்றோர் –
நெஞ்சத்து அன்பாலே
‘அண்ணா’ என்ற ஒரு சொல்லால் அழைக்கட்டும் என்றே –
அவர் அன்னை பெயரும் தந்தார்” –

என்று ‘காஞ்சி தந்த வள்ளுவன்’ பேரறிஞர் அண்ணா பற்றி அடுக்கு மொழியில் கவிதை நடையில் சொன்னார், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

அப்படிப்பட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களது பிறந்தநாளான இன்றைக்கு கலைஞர் உரிமைத் தொகை எனும் வரலாற்றுச் சிறப்புமிக்க தொடக்கவிழாவிலே பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக் கூடிய பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

அண்ணாவைத் தந்த தாய்மடியாம், கலைமிகு காஞ்சி மாநகருக்கு நான் வந்திருக்கிறேன். என்னுடைய அரசியல் பயணத்திற்கு எத்தனையோ உந்து சக்திகள் இருக்கலாம். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்த மாதிரி இருந்தது இந்த காஞ்சி மாநகர்.

மிகவும் சின்ன வயதிலேயே கோபாலபுரம் பகுதியில் ‘இளைஞர் தி.மு.க.’ என்ற அமைப்பை ஏற்படுத்தி அந்த அமைப்பின் மூலமாக பொதுவாழ்வில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். அப்போது பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துவது என்னுடைய வழக்கம்.

**காஞ்சிக்கு ‘அண்ணா சுடர்’ ஏந்தி அந்நாளில் நான் வந்ததை எண்ணிப் பார்க்கிறேன்!**

1971ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா துயில் கொண்டிருக்கக்கூடிய அவருடைய கல்லறையில் மலர்வளையம் வைத்து மரியாதை செய்து – வணங்கி, அண்ணா சதுக்கத்திலிருந்து ‘அண்ணா சுடரை’ கையில் ஏந்தி தொடர் ஓட்டமாக நானும், என்னுடைய நண்பர்களும் புறப்பட்டு, காஞ்சிபுரம் வந்து, இங்கே நடைபெற்றுக் கொண்டிருந்த கழக மாநாட்டு மேடையில் தலைவர் கலைஞர் அவர்களின் கையில் அண்ணா சுடரை நான் ஒப்படைத்தேன். அப்போது, தலைவர் கலைஞருக்குப் பக்கத்தில் அன்றைக்குப் பொதுச்செயலாளராக இருந்த மதிப்பிற்குரிய நாவலர் அவர்களும், பொருளாளராக இருந்த மரியாதைக்குரிய மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களும் இருந்தார்கள்.

அன்றைக்கு 18 வயதில் அண்ணா சுடரை ஏந்தி இங்கே வந்து நான், இன்றைக்கு தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், தலைவர் கலைஞர் அவர்களும் எடுத்து வந்த, சுயமரியாதை, சமத்துவம், சமூகநீதி, மாநில சுயாட்சி உள்ளிட்ட தமிழ்ச் சமுதாயத்தைக் காக்கும் திராவிடச் சுடரை ஏந்தி வந்திருக்கின்றேன். அவர்களுடைய கொள்கைகளை ஏற்று வாழ்வதில்தான் தமிழ்ச் சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்ற “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை” தொடங்கி வைக்க இங்கே வந்திருக்கின்றேன்.

இத்திட்டம் தொடங்குவது, அதை நான் தொடங்கி வைப்பது, என் வாழ்நாளில் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய பேறாக நான் கருதுகிறேன்.

> **“தாய்த் தமிழ்நாட்டிற்கு “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்கள் “இனி இந்தப் பெயரை யாராலும் நீக்க முடியாது. இந்தப் பெயர் நீட்டிக்கும் காலமெல்லாம் இந்த நாட்டை அண்ணாத்துரைதான் ஆள்கிறான் என்று பொருள்” என்றார். அதேபோல், இன்றைக்கு இந்த மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கும் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சொல்கிறேன், இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு பெண்கள் உரிமைத் தொகை பெறுகிறார்களோ, அத்தனை ஆண்டுகளுக்கும் இந்த ஸ்டாலின்தான் ஆள்கிறான் என்று பொருள்.”**

**ஏனைய திட்டங்களை விட எனக்குப் பெரு மகிழ்ச்சி அளிக்கும் திட்டம்!**

தாய்த் தமிழ்நாட்டிற்கு “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா அவர்கள் “இனி இந்தப் பெயரை யாராலும் நீக்க முடியாது. இந்தப் பெயர் நீட்டிக்கும் காலமெல்லாம் இந்த நாட்டை அண்ணாத்துரைதான் ஆள்கிறான் என்று பொருள்” என்றார்.

அதேபோல், இன்றைக்கு இந்த மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கும் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சொல்கிறேன், இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு பெண்கள் உரிமைத் தொகை பெறுகிறார்களோ, அத்தனை ஆண்டுகளுக்கும் இந்த ஸ்டாலின் தான் ஆள்கிறான் என்று பொருள்.

இந்த இரண்டரை ஆண்டில் எத்தனை எத்தனை திட்டங்கள்!

மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து வசதிகளைத் தருகின்ற ‘விடியல் பயணம்’ திட்டம், பசியோடு பள்ளிக்கு வருகின்ற குழந்தைகளுக்கு காலை உணவுத் திட்டம்,

தொடர்ச்சி 3ஆம் பக்கம்



இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 16-09-2023


# தாயுமானார் தந்தையுமானார்

'இது உதவித் தொகையல்ல - உரிமைத் தொகை' என்று சொன்னார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். உரிமைத் தொகையானது உரியவர்களுக்கு போய்ச் சேரத் தொடங்கி விட்டது. இந்த மாதம் மட்டுமல்ல, இனி மாதம் தோறும் கிடைக்கப் போகிறது. இந்த ஆண்டு மட்டுமல்ல, இனி ஆண்டு தோறும் கிடைக்கப் போகிறது. பெண்ணினத்துக்கு திராவிட முன்னேற்றக் கழகம் வழங்கி இருக்கும் மாபெரும் கொடையாகும் இது.

**'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' என்பது திராவிட மாடல் ஆட்சியின் கொடை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடை. தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டின் கொடை. தி.மு.க.வுக்கு இது பவள விழா ஆண்டு. இந்த பவள விழாவின் கொடை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பரந்த உள்ளத்தின் விரிந்த பரப்பைக் காட்டுவதாக இந்தத் திட்டம் அமைந்துள்ளது.**

**ஒரு கோடியே 63 லட்சம் பேர் விண்ணப்பம் செய்துள்ளார்கள். ஒரு கோடியே 6 லட்சம் பேருக்கு மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் தரப்படும் திட்டம் தொடங்கி விட்டது. விடுபட்டவர்கள் அனைவர்க்கும் அதற்கான காரணத்தை அறிவிக்கிறார்கள். ஒருவேளை, அவர்கள் மறுபடியும் விண்ணப்பித்தால் அதையும் அரசு ஆய்வு செய்ய இருக்கிறது. ஒருவேளை, அவர்களுக்கு மீண்டும் கிடைக்கலாம். இவ்வளவு நெகிழ்வுத் தன்மையுடன்தான் இந்த திட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளது.**

**சிலருக்கு கொடுத்து கணக்குக் காட்ட நினைத்திருந்தால், இது போல் எல்லாம் சொல்ல மாட்டார்கள். 'விடுபட்டவர்களும் விண்ணப்பம் செய்யலாம்' என்றெல்லாம் வாய்ப்பை வழங்க மாட்டார்கள். மாறாக, உரியவர்கள் யாரும் விடுபட்டு விடக் கூடாது என்பதில் முதலமைச்சர் அவர்கள் கருத்தாக இருக்கிறார்கள் என்பது இதன் மூலம் அறிவிக்கப்பட்டது.**

'யாருக்கெல்லாம் கிடைக்கும்?' என்று கேட்கப்பட்டபோது, 'யாருக்கெல்லாம் ஆயிரம் ரூபாய் தேவையோ - அவசியமோ அவர்கள் அனைவருக்கும் கிடைக்கும்' என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரேநாளில் ஒன்றுக்கும் மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய விளிம்பு நிலையில் வாழும் பெண்கள் என பல்வேறு வகையில் தங்கள் விலைமதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து வழங்கிவரும் பெண்கள் இந்தத் திட்டத்தில் பயன்பெறவுள்ளார்கள் - என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இத்தகைய பெண்கள் அனைவருக்கும் மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் கிடைப்பது என்பது சாதாரணமானது அல்ல. 'நம்மிடம் ஆயிரம் ரூபாய் கூட இல்லையே... நம்மிடம் கையில ஒரு நூறு ரூபாய் கூட இல்லையே' என்ற ஏக்கம் இனி அவர்களுக்கு இருக்காது. அந்த ஏக்கத்தைத் துடைத்து விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது என்றால் அது வெறும் பணம் மட்டுமல்ல. மகளிருக்கு ஆயிரம் ரூபாயின் மூலமாக அங்கீகாரம் வழங்கப்படுகிறது. மதிப்பும் மரியாதையும் வழங்கப்படுகிறது. தன்னம்பிக்கை வழங்கப்படுகிறது. ஒரு விதமான அதிகாரம் வழங்கப்படுகிறது. இதனுடைய மதிப்பை ஆயிரம் ரூபாய் என்று அளவிட முடியாது. இது ஆயிரம் விதமான உணர்வுகளை ஒவ்வொரு பெண்ணுக்கும் கொடுக்கத்தான் போகிறது. "ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை கிடைக்கப் போகிறது. இது பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்கும். தந்தை பெரியாரிடம், பேரறிஞர் அண்ணாவிடம், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களிடம் நாங்கள் கற்ற பாடங்களின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை தீட்டி இருக்கிறோம்." என்று முதலமைச்சர் அவர்கள் சொல்வதற்குள் மாபெரும் சமூக நோக்கம் இருக்கிறது.

ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட - பட்டியலின - பழங்குடியினர் நல்வாழ்வையும் - பெண்ணினத்தின் பெருவாழ்வையும் எப்போதும் கவனத்தில் வைத்தே செயல்பட்டு வந்திருக்கிறது திராவிட இயக்கம். அந்த இயக்கம் உருவாக்கப்பட்டதன் நோக்கமும் இதுதான். நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில்தான் - 1921 ஆம் ஆண்டு பெண்களும் வாக்களிக்கலாம் என்ற சட்ட உரிமை தரப்பட்டது. தந்தை சொத்தில் மகளுக்கும் சம உரிமை உண்டு என்ற சட்டத்தை தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்தான் 1989 ஆம் ஆண்டு பிறப்பித்தார்கள். பணியிடங்களில் பெண்களுக்கு 30 சதவிகித இடஒதுக்கீடு தந்தவர் கலைஞர். உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 சதவிகித இடஒதுக்கீடு தரப்பட்டது. மகளிர் சொந்தக் காலில் நிற்கவும், அவர்கள் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றவர்களாக வலம் வரவும் மகளிர் சுய உதவிக் குழுக்களை தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கில் தொடங்கி வைத்தவர் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

இப்போது ஆட்சிக்கு வந்ததும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இட்ட முதல் கையெழுத்து என்பது மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தரும் விடியல் பயணம் திட்டம் தொடங்கப்பட்டது. 'புதுமைப் பெண்' என்ற திட்டப்படி அரசுப் பள்ளியில் படித்து, கல்லூரிக் கல்வியை அடையும் மாணவிகளுக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் கிடைத்து வருகிறது. இதோ இப்போது கலைஞர் அவர்கள் பெயரிலான மகளிர் உரிமைத் தொகையை ஒரு கோடி பெண்கள் பெற இருக்கிறார்கள்.

**ஒவ்வொரு வீட்டுக்கும் தாயுமானவராய் - தந்தையுமானவராய் உயர்ந்து நிற்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். ஒரு கோடி குடும்பங்களின் சார்பில் முதலமைச்சரை வாழ்த்துகிறோம். கிராமப்புறப் பெண்கள் பாணியில் சொல்வதாக இருந்தால், "மவராசன் வாழ்க!"**

## எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான டெண்டர் முறைகேடு வழக்கு!

புதுடெல்லி, செப். 16 -

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறையில் டெண்டர் கோரியதில் 4 ஆயிரத்து 800 கோடி அளவிற்கு முறைகேடு நடந்துள்ளதாக கூறி, முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராக அளித்த புகார் மீது சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்து விசாரிக்க உத்தரவிடக் கோரி தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி, சென்னை உயர் நீதிமன்றத்தில் 2018ம் ஆண்டு வழக்கு தொடர்ந்தார்.

அதனைத் தொடர்ந்து, வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், இந்த முறைகேடு புகார் குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தும்படி உத்தரவிட்டிருந்தது. இதனை எதிர்த்து, எடப்பாடி பழனிசாமி தொடர்ந்த மேல்முறையீடு வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் பிறப் பித்த உத்தரவை ரத்து செய்ததுடன், இந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் மீண்டும் விசாரித்து முடிவெடுக்க உத்தரவிட்டிருந்தது.

அதன்பின்னர், பழனிசாமிக்கு எதிரான வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி என். ஆனந்த் வெங்கடேஷ், ஆட்சி மாற்றம் காரணமாக மீண்டும் புதிதாக விசாரணை நடத்த தேவையில்லை என்று உத்தரவிட்டு, மனுவை தள்ளுபடி செய்தார். அவரது உத்தரவை எதிர்த்து, தமிழ்நாடு லஞ்ச ஒழிப்புத்துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜோசப் அரிஸ்டாட்டில், உச்சநீதிமன்றத்தில் கடந்த 11ம் தேதி மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தார்.

இந்நிலையில், இந்த வழக்கானது உச்சநீதிமன்றத்தின் உத்தேச விசாரணை பட்டியலில் வரும் 18ம் தேதி இடம்பெற்றுள்ளது.

### பேரறிஞர் அண்ணா போதித்த கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு நாடாளுமன்றக் களம் காண்போம்!

# இந்தியாவை மீட்கும் வேட்கைத் தீ நாடெங்கும் பரவட்டும்!

### அண்ணா பிறந்தநாளையொட்டி - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப். 16-

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில், "பேரறிஞர் அண்ணா தந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு நாடாளுமன்றக் களம் காண்போம்!" என்றும், "இந்தியாவை மீட்கும் வேட்கைத் தீ நாடெங்கும் பரவட்டும்!" என்றும் சூளுரைத்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

அறிவியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து, என்றும் தமிழ்நாட்டை ஆளும் தலைமகன் பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள்!

தன் அறிவுத்திறத்தால் தமிழினத்தைப் பண்படுத்திய பேரறிஞர் காட்டிய பாதையில், கடமை ஆற்றக் கண்ணியம் தவறாது கட்டுப்பாட்டோடு நாடாளுமன்றக் களம் காண்போம்!

எண்ணித்துணிவோம்! இந்தியாவை மீட்கும் வேட்கைத் தீ பரவட்டும் நாடெங்கும்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2023) பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி, காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு இல்லத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்திய காட்சி.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (15.9.2023) முகாம் அலுவலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜாவின் மகன் சூர்ய ராஜா பாலு சட்டப் பட்டப்படிப்பு படிப்பதற்காக இங்கிலாந்து நாட்டிற்கு செல்லவுள்ளதையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.

### 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும்

# 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!'

### காஞ்சிபுரத்தில் நடைபெற்ற எழில்மிகு விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**காஞ்சிபுரம், செப். 16-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான நேற்று (15.9.2023) காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.**

இத்திட்ட தொடக்கத்தின் அடையாளமாக 13 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார்.

அதன் விபரம் வருமாறு:-

**நிதிநிலை அறிக்கையில் மகளிர் உரிமைத் தொகை திட்டம் பற்றிய அறிவிப்பு**

தமிழ்நாடு அரசின் 2023-24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "மகளிருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடு அளித்தது முதல், தற்போது கட்டணமில்லாப் பேருந்து பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்படும். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் எனச் சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய்த் தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

**மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் முதலமைச்சர் விளக்கம்!**

முதலமைச்சர் அவர்கள் 27.3.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அளித்த விளக்கத்தில், "மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்" இரண்டு நோக்கங்களைக் கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என்பது, குடும்பத் தலைவிகளுக்கு அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய பெண்கள் என பல்வேறு வகைகளில் தங்கள் விலைமதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து வழங்கி வரும் பெண்கள் இந்தத் திட்டத்தால் பயன் பெறுவார்கள் என்றும், இந்த மகத்தான 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும் என்றும் அறிவித்தார்.

சமுதாயத்தில் உள்ள விளிம்பு நிலை மக்களாகிய சாலையோரங்களில் குடியிருப்போர், பழங்குடியினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர ஆதரவற்றோர் இந்தத் திட்டத்தில் பயன் அடைவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிசெய்ய வேண்டும் என்றும், அவர்களிடம் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற தரவுகள் இல்லையென்றாலும் கூட, அவற்றைப் பெறுவதற்கு உரிய வழிவகை செய்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவி புரிய வேண்டும் என்றும், எந்தவொரு தகுதியான பயனாளியும் விடுபட்டுவிடக் கூடாது என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களை அறிவுறுத்தி இருந்தார்.

**தருமபுரியில் விண்ணப்பப் பதிவு முகாம்!**

தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.7.2023 அன்று தொடங்கி வைத்தார்.

இந்தத் திட்டத்தில் மாநிலம் முழுவதும் விண்ணப்பங்கள் பெற 24.07.2023 முதல் 4.08.2023 வரை முதல் கட்டமாகவும், 5.08.2023 முதல் 14.08.2023 வரை இரண்டாவது கட்டமாகவும், மேற்சொன்ன இரண்டு கட்டங்களிலும், விடுபட்டவர்களுக்கு 18.08.2023 முதல் 20.08.2023 வரை சிறப்பு முகாம் வழியாகவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இணைந்து கொள்ள 1 கோடியே 63 லட்சம் விண்ணப்பங்கள் அரசிற்கு வந்துள்ளது. அவற்றில் தகுதியுள்ள

1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1000/ அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

விண்ணப்பதாரர்களின் விண்ணப்ப முடிவு நிலை குறித்த குறுஞ்செய்தி விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு 18.09.2023 முதல் அனுப்பி வைக்கப்படும்.

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தல்!**

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான நேற்று, அவர் பிறந்த காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து, 13 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். இந்த திட்டத்திற்காக இந்த ஆண்டுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம். மகாலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் கே. சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன்,

கு. செல்வப்பெருந்தகை, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, எஸ்.ஆர். ராஜா, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர்

த. உதயச்சந்திரன், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், வங்கிகளின் உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# என் அருமைச் சகோதரிகளே! உங்கள் கனவுகளை நிறைவேற்றும், உங்கள் கவலைகளைப் போக்கும் ஆட்சி இது!

## காஞ்சிபுரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

உயர்கல்வி கற்க வருகின்ற மாணவியருக்கு ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற ‘புதுமைப் பெண்’ திட்டம், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும், ‘நான் முதல்வன்’ திட்டம், இந்தத் திட்டங்களைத் தொடங்கிய நாட்களில் எப்படிப்பட்ட மகிழ்ச்சியை நான் அடைந்தேனோ, அதைவிட அதிகமான மகிழ்ச்சியில் இப்போது இருக்கின்றேன்.

சமீபத்தில் ஒரு வீடியோவைப் பார்த்தேன். அதில் ஒரு நிருபர், மக்களிடம், “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் 1000 ரூபாய் கொடுக்கப்பட்ட பிறகு என்ன செய்வீர்கள்?” என்று கேட்கிறார்.......

### உரிமைத் தொகை குறித்து மகளிர் கூறிய நெகிழ்ச்சியான கருத்துகள்!

“காசு இல்லாததால் மருந்து மாத்திரை சாப்பிடுறதில்ல.. இனி மாத்திரை வாங்குவேன்” என்று ஒரு பாட்டி சொல்கிறார்கள்.

இன்னொரு பெண்மணி “தினமும் ஒருவேளைதான் சாப்பிடுகிறேன்.. இந்த ஆயிரம் ரூபாய் கிடைச்சா... காலையில ரெண்டு இட்லி சாப்பிடுவேன்” என்று சொன்னார்.

இந்த இரண்டு பதிலும் எனக்கு நெகிழ்ச்சியைத் தந்தாலும், காலத்திற்கும் எண்ணி நான் பெருமைப்படுகிற மாதிரியான ஒரு பதிலை, நாம் எந்த நோக்கத்தில் இந்தத் திட்டத்தை செயல்படுத்துகிறோமோ அதை ஒரு வரியில் சொல்கின்ற மாதிரி இன்னொரு பெண்மணி ஒன்று சொன்னார்...

“சுருக்குப் பையில் பணம் இருந்தது என்றால் நிமிர்ந்து நடந்து போவேன்” என்று அவர் சொன்னார். அதாவது, “சுருக்குப் பையில் பணம் இருந்தது என்றால் நிமிர்ந்து நடப்பேன்” என்று அவர் சொன்னார். இதைவிட இந்தத் திட்டத்திற்கும், எனக்கும் வேறு என்ன பெருமை வேண்டும்?

அண்ணா பிறந்தநாளில், கலைஞர் நூற்றாண்டில் செயல்படுத்துகின்ற இந்தத் திட்டத்திற்கு, இதைவிட என்ன பாராட்டு இருக்க முடியும்? இந்தக் கூட்டத்தில் இருக்கின்ற உங்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு பதில் இருக்கும். பதில் வேறு வேறாக இருந்தாலும் பயன் ஒன்றுதான்.

### தி.மு.க. அறிவித்த முக்கியமான தேர்தல் வாக்குறுதி!

இந்த ஆயிரம் ரூபாய் உங்கள் வாழ்க்கைக்கு உதவியாக இருக்கப் போகின்றது. நாள்தோறும் உதிக்கும் உதயசூரியன் போல உங்களுடைய இந்த உதயசூரியன் ஆட்சியும் உங்களுக்குப் புத்துணர்ச்சியை வழங்க இந்த ஆயிரம் ரூபாய் பயன்படப்போகின்றது. இது தி.மு.க.வுடைய தேர்தல் அறிக்கையில் அறிவித்த வாக்குறுதி! மிகவும் முக்கியமான வாக்குறுதி!

“இது நிறைவேற்ற முடியாத வாக்குறுதி, பொய்யான வாக்குறுதியைக் கொடுத்து மக்களை ஏமாற்றிவிட்டார்கள். இவர்களால் தர முடியாது” என்று பொய் பரப்புரையை தங்களுடைய உயிர்மூச்சாக வைத்து வாழுகின்ற சிலர் சொன்னார்கள். ஆட்சிக்கு வந்தவுடன் கொடுத்திருப்போம். ஆனால் நிதி நிலைமை சரியாக இல்லை. அதுனால்தான், நிதி நிலைமையை ஓரளவுக்கு சரி செய்துவிட்டு இப்போது கொடுக்கின்றோம். இதையும் சிலரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை! பொய்களையும், வதந்திகளையும் கிளப்பி இந்தத் திட்டத்தை முடக்க நினைத்தார்கள். அறிவித்துவிட்டால், எதையும் நிறைவேற்றிக் காட்டுவான் இந்த ஸ்டாலின் என்று தமிழ்நாட்டு மக்களான உங்களுக்கு நன்றாகத் தெரியும். சொன்னதைச் செய்வான் கலைஞரின் மகன் என்பதற்கு இதுதான் சாட்சி.

இந்த விழா காஞ்சிபுரத்தில் மட்டுமல்ல; தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய மாவட்டங்களில், நகரங்களில் நடந்துகொண்டு இருக்கிறது.

நான் காஞ்சிபுரம் வந்திருப்பது மாதிரியே, அமைச்சர்கள் எல்லோரும் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று விழாக்களில் கலந்து கொண்டு இருக்கிறார்கள். நான் போட்ட ஒரு கையெழுத்து, பலரது வாழ்க்கையை மாற்றப் போகிறது என்ற அந்த உரிமையை எனக்குக் கொடுத்தவர்களே நீங்கள்தான்!

தமிழ்நாட்டு மக்களான நீங்கள் உதயசூரியன் சின்னத்தையும், எங்கள் கூட்டணிக் கட்சிகளுடைய சின்னங்களையும் வாக்கு இயந்திரத்தில் அழுத்தியதால்தான் முதலமைச்சர் பொறுப்பில் உட்கார்ந்து உங்களுக்குத் தேவையானதைச் செய்து கொண்டு இருக்கிறேன்.

மக்கள் கொடுத்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன். மக்களுக்காகத்தான் பயன்படுத்துவேன். இந்த இரண்டு திட்டங்கள், நான் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இந்தத் திட்டம், இரண்டு நோக்கங்களைக் கொண்ட திட்டம். ஒன்று, பலனை எதிர்பாராமல் வாழ்நாளெல்லாம் உழைக்கக்கூடிய பெண்களுடைய உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம்!

### சுயமரியாதையோடு பெண்கள் வாழ உறுதுணையான திட்டம் இது!

இரண்டாவது நோக்கம், ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை கிடைக்கப் போகின்றது. இது பெண்களுடைய வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் பெண்கள் வாழ உறுதுணையாக இருக்கும். இந்த இரண்டும் ‘திராவிட மாடல்’ ஆட்சியினுடைய நோக்கங்கள்.

தந்தை பெரியாரிடம், பேரறிஞர் அண்ணாவிடம், தலைவர் கலைஞர் அவர்களிடம் நாங்கள் கற்ற பாடங்களின் அடிப்படையில்தான் இந்தத் திட்டத்தைத் தீட்டி இருக்கிறோம். வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தால், தாய்வழிச் சமூகமுறைதான் மனிதகுலத்தில் முதலில் வழிநடத்தி வந்திருக்கிறது.

உழவுக் கருவிகளைக் கண்டுபிடித்து, வேளாண் சமூகமாக மாறினால்கூட பெண்களுடைய உழைப்பு ஆண்களுக்கு நிகராகவே இருந்தது. ஆனால் காலப்போக்கில், மதத்தின் பெயராலும், பழமையான மரபுகளின் பெயராலும், பல்வேறு ஆதிக்க வர்க்கங்களாலும், பெண்கள் வீட்டுக்குள்ளேயே முடக்கப்பட்டார்கள்.

பெண்களுக்கு கல்வியறிவு மறுக்கப்பட்டது.




பெண்குலத்தினுடைய உழைப்பு நிராகரிக்கப்பட்டது. பெண்களை அடிமையாக நினைக்கின்ற - நடத்துகின்ற காலம் ஒன்று இருந்தது. “கீழ் வகுப்பைச் சேர்ந்தவர்களும், பெண்களும் இழிவானவர்கள்” என்றெல்லாம் கூட எழுதி வைத்திருந்தார்கள்.

### பாரபட்சமின்றி பெண்கள் அனைவரும் பட்ட துன்பம்!

இன்றைக்கு மானமும், அறிவும் உள்ள யாரும் அந்த மாதிரி பேசுவதில்லை. பெண் உடல்ரீதியாக எதிர்கொள்ளுகின்ற இயற்கை சுழற்சியைக்கூட தீட்டு என்று சொல்லி வீட்டுக்குள்ளேயே முடக்கி வைத்தார்கள். ஓரமாக ஒதுக்கி வைத்தார்கள். படிக்கக் கூடாது வேலைக்குப் போகக் கூடாது வீட்டுப்படியைத் தாண்டக் கூடாது - அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு? என்று பழமைவாதச் சிந்தனைகள வைத்து பெரும்பான்மை பெண்ணினத்தை முடக்கி வைத்தார்கள். இது அடித்தட்டு வகுப்பைச் சேர்ந்த பெண்கள் மட்டுமில்லை, உயர் வகுப்பைச் சேர்ந்த பெண்களும் அனுபவித்த துன்பம்!

**8 வயதில், 10 வயதில் குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைத்தார்கள். இவையெல்லாம் இன்றைக்கு மாறி இருக்கிறது. ஆனாலும், குழந்தைத் திருமணங்களை ஆதரித்துப் பேசுகின்ற பிற்போக்குவாதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு திராவிட இயக்கத்தின் மேல் வெறுப்பு, தீராத கோபம்... ஏனென்றால்..., சிறுமிகளுக்கு திருமணம் செய்து வைக்க முடியாது. அப்படி செய்தால், அது சட்டப்படி குற்றம். கைம்பெண் விரும்பினால் மறுமணம் செய்துகொள்ளலாம். மறுமணம் செய்து கொள்ளக் கூடாது என்று யாரும் சொல்ல முடியாது.**

### சமூக சீர்திருத்த காலத்தை உருவாக்கியது திராவிட இயக்கம்!

பெண் குழந்தைகள் அனைவரும் படிக்க பள்ளி, கல்லூரிக்கு வந்துவிட்டார்கள். இனி, உனக்கு படிப்பு எதுக்கு என்று சொல்ல முடியாது. நீ வேலைக்கு போகக் கூடாது என்று யாரும் தடுக்க முடியாது. இந்தச் சமூக சீர்திருத்த காலத்தை உருவாக்கியதுதான் திராவிட இயக்கம்!

இன்றைக்கு பள்ளிகளில், கல்லூரிகளில் ஆண்களைவிட பெண்கள்தான் அதிகமாக படிக்கிறார்கள். அதுவும் நன்றாக படிக்கிறார்கள். அனைத்து வேலைகளுக்கும் பெண்கள் வந்துவிட்டார்கள். இந்த பாலினச் சமத்துவத்தைக் கொண்டு வந்து பெண்ணும், ஆணும் சரிநிகர் என்று உயர்த்தியதுதான் நம்முடைய திராவிட மாடல்!

இன்னும் சொல்லவேண்டும் என்றால், தந்தை பெரியார் சொன்ன மாதிரி, ஆணை விடவும் உயர்ந்தவர்களாக பெண்களை உயர்த்துவதுதான் திராவிட மாடல்! ஏழைத் தாய்மார்களின் குழந்தைகள் இன்றைக்கு மருத்துவர்களாக, பொறியாளர்களாக, ஆசிரியர்களாக வலம் வருவதைப் பார்க்கின்றபோது பெருமையாக இருக்கிறது. இந்தச் சமூகத்தில் வெற்றிபெற்ற ஒவ்வொரு சாதனையாளருடைய பின்னாலும், பெண்களுடைய உழைப்பு இருக்கின்றது என்று யாரும் மறுக்க முடியாது.

### ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண்கள் நல்கும் பேருழைப்பு!

“எங்கள் அம்மா இல்லை என்றால் நான் இல்லை” என்று எத்தனையோ சாதனை மாணவிகள் பேட்டி தருவதை தொலைக்காட்சியில், பத்திரிகைகளில் பார்த்திருக்கின்றோம். படித்திருக்கின்றோம்.

பூட்டிய இரும்புக் கூட்டின் கதவைத் திறந்து, பெண் அடிமைத்தனத்தை தகர்த்து, பெண்களுக்கான சமூக, பொருளாதார விடுதலையை மீட்க எத்தனையோ சமூக சீர்திருத்தவாதிகள் முன்வந்தாலும், இருபதாம் நூற்றாண்டில், தந்தை பெரியாருடைய சுயமரியாதை இயக்கம்தான் வீறுகொண்ட போராட்டங்களின் மூலமாக பெண் விடுதலைக்கு பாதை அமைத்தது. அதனால்தான் 1938ஆம் ஆண்டில் ‘தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில்’ ‘பெரியார்’ என்ற பட்டத்தை பெண்கள் எல்லோரும் சேர்ந்து கொடுத்தார்கள். இன்றைக்கும் ஏழைக் குடும்பங்களையும், கிராமப் பொருளாதாரத்தையும் சுமக்கும் முதுகெலும்பாக பெண்கள்தான் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளும் தன் திறனுக்கேற்ற பணிபுரிந்து பொருள் ஈட்டும் ஒவ்வொரு ஆணுக்குப் பின்னாலும் அவருடைய தாய், சகோதரி, மனைவி என அந்த ஆணின் வீட்டுப் பெண்களுடைய பல மணிநேர உழைப்பு மறைந்திருக்கிறது.

ஒரு ஆணினுடைய வெற்றிக்காகவும், தங்கள் குழந்தைகளுடைய கல்வி, உடல்நலம் காக்கவும், ஒரு நாளைக்கு எத்தனை மணிநேரம் பெண்கள் உழைத்திருப்பார்கள்? அதற்கெல்லாம் ஊதியம் கணக்கிட்டுக் கொடுத்தால் எவ்வளவு கொடுப்பது? ஆனால் ‘ஹவுஸ் ஒய்ஃப்’ என்று சிலர் சாதாரணமாகச் சொல்லி விடுவார்கள்.

### பெண்களின் உழைப்பை அங்கீகரிக்க உருவாக்கிய திட்டம்!

‘உங்கள் மனைவி வேலைக்குப் போகிறார்களா?’ என்று கேட்டால், “இல்லை” என்று மட்டும் சொல்லாமல் “வீட்டில் சும்மாதான் இருக்கிறார்கள்” என்று சிலர் சொல்வார்கள். வீட்டில் சும்மாவா நீங்கள் இருக்கிறீர்கள்? வீட்டில் பெண்களால் சும்மா இருக்க முடியுமா? வீட்டில் பார்க்கின்ற வேலைகளை யாரும் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. ஆனால் மகளிருக்கான உரிமையைக் கொடுக்கவேண்டும், அவர்கள் உழைப்பை அங்கீகரிக்க வேண்டும் என்று உருவாக்கிய திட்டம்தான் இந்தக் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்.

**தாயின் கருணை! மனைவியின் உறுதுணை! மகளின் பேரன்பு! இவையெல்லாம் ஒருவருக்குக் கிடைத்துவிட்டால், அதைவிட வேறு செல்வம் தேவையில்லை! உண்மையில், உலகை வழி நடத்துவது தாய்மையும், பெண்மையும்தான்! என்னுடைய தாய் தயாளு அம்மையார், கருணையே வடிவானவர்கள். சிறிய வயதில் நான் ஏதாவது நிகழ்ச்சி நடத்தினால் அன்றைக்கு மழை வரக் கூடாது என்று வேண்டிக்கொள்வார்.**

**என்னுடைய அரசியல் வாழ்க்கையில் சிறு சிறு சம்பவங்களைக்கூட துவக்க காலத்தில் என் அம்மாவிடம் சொல்லித்தான், தலைவர் கலைஞரிடம் சொல்லச் சொல்வேன். இன்றைக்கு அவர்கள் வயது முதிர்ந்த நிலையில், கோபாலபுரம் இல்லத்தில் ஓய்வெடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். நான் சென்று பார்க்கின்றபோது என் அம்மா முகத்தில் ஏற்படுகின்ற மகிழ்ச்சிக்கு இணையானது வேறு எதுவும் கிடையாது.**

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

செப்டம்பர் 17, தி.மு.க. தோற்றுவிக்கப்பட்ட தினம்!

## தென்னகத்தின் ஒளிவிளக்கு தி.மு.க.!



நீதிக்கட்சியின் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த அறிஞர் அண்ணா, 1944ல் சேலத்தில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டிலே, ‘அண்ணாதுரை தீர்மானம்’ என்று தந்தை பெரியார் அவர்களால் பெயரிடப்பட்ட, “தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (Justice Party - நீதிக்கட்சி) என்ற பெயரை மாற்றித் திராவிடர் கழகம் என்று பெயரிடப்பட வேண்டும்” என்ற தீர்மானத்தின் மூலம், தந்தை பெரியார் அவர்களின் தலைமையைக் காப்பாற்றி, திராவிடர் கழகம் உருவாகிடக் காரண கர்த்தாவாக இருந்தார் அண்ணா.

ஒரு சில கருத்து வேறுபாடுகளினால், திராவிடர் கழகத்திலிருந்து - தந்தை பெரியாரிடமிருந்து பிரிந்து 1949, செப்டம்பர் 17ஆம் தேதியன்று திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் மாபெரும் இயக்கத்திற்கான விதையை ஊன்றிய வித்தகரானார் அண்ணா!

அன்றைய தினம் சென்னை - ராயபுரம் ராபின்சன் பூங்காத் திடலில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்கவிழாப் பொதுக்கூட்டத்தில், பல்வேறு தரப்பினரின் அய்யப்பாடுகளை அகற்றிடும் வண்ணம் அண்ணா ஆற்றிய உரை, தி.மு.க. வரலாற்றில் மிக முக்கியமான ஆவணமாகக் கருதப்படுகிறது.

“திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிவிட்டது. திராவிடர் கழகத்திற்குப் போட்டியாக அல்ல. திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீதேதான் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

**1. சமுதாயச் சீர்திருத்தம். 2. பொருளாதாரத் துறையில் சமதர்மக் குறிக்கோள். 3. அரசியல் துறையிலே வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்றும் விடுதலை. – ஆகிய கொள்கைகள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகள் ஆகும்.**

**இத்தனை ஆண்டுகளிலும் நான் அறிந்த தலைவர் – தெரிந்த தலைவர் – பார்த்த தலைவர், பெரியார் ஒருவர்தான். திராவிட முன்னேற்றக் கழகம் எந்த விதத்திலும் திராவிடர் கழகத்துக்கு எதிரானது அல்ல; எதிர் நோக்கம் கொண்டதும் அல்ல. கொள்கை ஒன்றே, இரு கழகங்களும், இரு திக்குகளில் இருந்தும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்து, வைதிகக் காட்டை அழித்துச் சமதர்மப் பூங்காவைத் திராவிடத்தில் செழிக்கச் செய்திடல் வேண்டும்.**

**கொள்கையைப் பரப்புவதே நமது முதல் பணி. பகைமை உணர்ச்சியை அடியோடு விட்டொழிக்க வேண்டும்; பகை உணர்ச்சியை வளர்த்து, எதிரிகளுக்கு இடங்கொடுத்து ஏமாளியாகத் தேவையில்லை.”**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொடக்கத்தில், அறிஞர் அண்ணா அவர்களுடைய மனதில், இன - மொழிவழிச் சிந்தனை, நிலவழிச் சிந்தனை, பொருளாதாரவழிச் சிந்தனை, ஆகியவையே மேலோங்கியிருந்தன. கட்சியின் இலட்சியம், திராவிட நாட்டைச் செழுமையான பூமியாகப் பேணிக் காப்பதாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தின் இலட்சியங்களாக எவையெவற்றையெல்லாம் வரையறை செய்து அன்றைக்கு ராபின்சன் பூங்காவில் பிரகடனம் செய்தாரோ, அவற்றின் அடிநாதம் குறைந்துவிடாமல், 1949 முதல் 1969 வரை இருபது ஆண்டுகளில் நாட்டின் அரசியல் - பொருளாதார முனைகளில் ஏற்பட்ட மாற்றங்கள், தேவைகள், அனுபவங்கள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு, தலைவர் கலைஞர் அவர்கள், கழகத்தின் இலட்சியங்களாக ஐம்பெரும் முழக்கங்களை வெளியிட்டார்.

அண்ணா மறைவுக்குப் பிறகு, கலைஞர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதை அடுத்து, 1970 பிப்ரவரி 22 – ஆம் நாள் திருச்சியில் கழக மாநாடு நடத்தப்பட்டது. அண்ணா இல்லாமல் நடைபெற்ற முதல் தி.மு.க. மாநாடு அதுதான். அந்த மாநாட்டில் பஞ்சாப் முதலமைச்சர் குர்ணாம்சிங் அவர்கள் கலந்து கொண்டு, மாநில உரிமைகள் நிலைநாட்டப்பட அழுத்தமானதும், ஆக்க பூர்வமானதுமான கருத்துகளை முன்வைத்து அழகுறப் பேசினார்.

அண்ணா அவர்கள் டெல்லி மாநிலங்களவையில் ஆற்றிய அரிய பேருரைகளிலும், தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஆற்றிய உரைகளிலும், மையக் கருத்தாக இடம் பெற்றிருந்தது மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்கள், அவற்றின் நீட்சியாக மாநில சுயாட்சி எனும் உரிமை சார்ந்த கோரிக்கை ஆகும்.

அண்ணா அவர்களின் ஆழ்ந்த சிந்தனையை முன்னெடுத்துச் செல்லும் வகையிலும், கழகத்தின் கோட்பாடுகளை, கழகத் தோழர்கள் எளிமையாக எடுத்தாளும் நோக்கிலும், பொதுமக்கள் எந்தவித சிரமமுமின்றி நேரடியாகப் புரிந்துகொள்ளும் வண்ணமும், இலட்சியங்களை முழக்கங்களாக வடிவமைத்து, திருச்சி மாநாட்டிலே கலைஞர் வெளியிட்டார்:

**1. அண்ணா வழியில் அயராது உழைப்போம். 2. ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம். 3. இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம். 4. வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம். 5. மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி.**

அண்ணா அனைவர்க்கும் எடுத்துக்காட்டிக் கடைபிடித்து வந்த - பகைமை உணர்ச்சியை அடியோடு விட்டொழித்த - அன்பு வழி, அமைதி வழி, அகிம்சை வழி, அறவழியில் பாடுபட்டு; நாம் யாருக்கும் எஜமானர்கள் அல்ல, நமக்கு யாரும் எஜமானர்கள் அல்லர் - என்ற அண்ணா அவர்களின் கூற்றுப்படி, எந்தவித ஆதிக்கமும் இல்லாத - மேலோன், கீழோன் எனும் பாகுபாடற்ற, சமத்துவ சமுதாயம் உருவாக்குவோம்;

தமிழ் தேசிய இனத்தின் தாய் மொழி, மூவாயிரம் ஆண்டுகள் மூத்த, செம்மொழியாம் தமிழ் மொழி; நம்மீது திணிக்கப்படும் இந்தி உள்ளிட்ட எந்த மொழியையும் எதிர்ப்போம் - இன்று மட்டுமல்ல, நாளை அல்ல, இனி என்றும் எதிர்ப்போம்;

தென்னாட்டுக் காந்தியாம் அண்ணா அவர்களால் ஊட்டி வளர்த்தெடுக்கப்பட்ட நமக்கு, வன்முறை ஆயுதம் வாழ்நாளில் வேண்டாம், நன்முறையாம் ஜனநாயக நெடுஞ்சாலைப் பயணம் நலமுடன் மேற்கொண்டு, உடனடியாக இல்லை என்றாலும், மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக, மாநிலத்தில் வாழும் மனிதரின் வறுமையை வென்றெடுப்போம்;

மாநில சுயாட்சி என்பது அண்ணா விட்டுச் சென்ற உயில், அண்ணா அவர்களின் கடைசிக் கனவு, எப்பாடு பட்டேனும், அந்த சுயாட்சியை அடைந்தே தீருவோம் !

அண்ணா அவர்களின் அடிச்சுவட்டில், கலைஞர் உருவாக்கித் தந்த கொள்கை அரிச்சுவடியாம் இந்த ஐம்பெரும் முழக்கங்களை, உச்சரிக்காத நா இல்லை கழகத்தில்; கேளாத செவியில்லை தமிழ் நாட்டில் !

**கலைஞருக்குப் பின்னர், “உழைப்பு, உழைப்பு, உழைப்பு” என்பதின் உருவகமாக, ஊருக்குழைத்திட ஓய்வின்றி ஓடிக்கொண்டே இருக்கும் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகத் தலைவராகப் பொறுப்பேற்று, இரண்டரை ஆண்டுகளில் முதலமைச்சரானதும், அண்ணா –– கலைஞர் அவனிக்களித்த கொள்கைப் பிரகடனம், செயல் திட்டமாகப் பிரதிபலித்திடும் வகையில், கழக ஆட்சியை, “திராவிட மாடல் ஆட்சி “ எனப் பொருள் செறிந்த பெயரிட்டார்.**

கழக ஆட்சி என்றால், கொள்கை அரசாகவும் - மக்களுக்கு சேவையாற்றும் அரசாகவும் அமையும் என்ற இலக்கணத்தை, பேரறிஞர் அண்ணா அவர்களும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் ஒரு வழிமுறையாகவே உருவாக்கிக் கொடுத்துள்ளார்கள்.

சுயமரியாதை - சமூகநீதி - வகுப்புவாரி உரிமை - சமத்துவம் - சகோதரத்துவம் - பெண்ணுரிமை – இன மானம், மொழி மானம் – மாநில சுயாட்சி – பகுத்தறிவு – அறிவியல் - இளைஞர் நலன் - உள் கட்டமைப்பு வசதிகள், ஆகிய கோட்பாடுகளையும் குறிக்கோள்களையும் உள்வாங்கி, அவற்றுக்கு முதன்மை முக்கியத்துவம் தரும் ஆட்சியாக, முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி, சீரும் சிறப்புமாகச் செம்மாந்து நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் – எனும் கட்சிப் பெயரில் உள்ள ‘முன்னேற்றம்’ மற்றும் ‘கழகம்’ என்ற சொற்கள் சாதாரணமாகப் புழக்கத்தில் உள்ள சொற்கள் என்றாலும்; ‘திராவிடம்’ என்ற சொல், ஒரு மந்திரச் சொல்லாகவும், மாற்றமும், ஏற்றமும் தாங்கிய மாத்தமிழ்ச் சொல்லாகவும் விளங்கி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை, முதல் 20 ஆண்டுகள் அறிஞர் அண்ணா அவர்களும், அடுத்த அரை நூற்றாண்டுக் காலம் கலைஞர் அவர்களும் வழி நடத்தி, மாபெரும் மக்கள் இயக்கமாக, எத்தகைய எதிரிகளாலும் அசைத்துப் பார்க்கவும் இயலாத எஃகுக் கோட்டையாக வளர்த்தெடுத்து நிலைநிறுத்தியிருக்கிறார்கள்.

**முரசொலி பவள விழா – கலைஞர் நூற்றாண்டு விழா ஆகிய இருபெரும் சரித்திர நிகழ்வுகளை, திராவிடத்தின் நினைவில் என்றென்றும் நின்று எழுச்சியூட்டும் வகையில் கொண்டாடுவதற்கும்; இப்போது கழகத்திற்குப் பவள விழா எடுப்பதற்கும்; தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பு, காலம், அவரது கனிவும், துணிவும், பணிவும், நிறைந்த ஆளுமைக்கு வழங்கியிருக்கும் அற்புதமான அரியநல் வாய்ப்பாகும் !**

**வாழ்க திராவிடம் ! வாழ்க கழகம் !**

★ ★ ★

: கி.இராஜமாணிக்கம் :






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான நேற்று (15.9.2023) காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ – வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து, 13 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், க.சுந்தர் எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம். மகாலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி. எழிலரசன், கு. செல்வப்பெருந்தகை, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் க. இளம்பகவத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளை (17.9.2023) முன்னிட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (15.9.2023) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், "சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், க.சுந்தர் எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி. எழிலரசன், கு. செல்வப்பெருந்தகை, தலைமைச் செயலாளர். சிவ் தாஸ் மீனா, வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்; சமூக வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றும்!

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

**எனது மிகப்பெரிய சக்தியாக இருப்பவர் எனது மனைவி!**

அதேபோலதான் என்னுடைய மனைவி துர்காவும். என்னுடைய பாதி என்று சொல்கின்ற அளவுக்கு என்கூட இருக்கிறார்கள். திருமணமாகி ஐந்தாவது மாதத்தில் மிசாவில் நான் கைது செய்யப்பட்டு, ஓராண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டேன். என் மனைவி அரசியல் குடும்பத்திலிருந்து வந்தவர் இல்லை. முதலில் அவருக்கு இது அதிர்ச்சியாக இருந்தது. அப்புறம் பொதுவாழ்க்கையில் இதெல்லாம் சகஜம், இயல்பு என்று புரிந்து தன்னை பக்குவப்படுத்திக் கொண்டார். என் வாழ்க்கையில் எத்தனையோ மேடு - பள்ளங்கள்! எல்லாவற்றிலும் எனக்கு உற்ற துணையாக, உறுதுணையாக இருந்து என்னுடைய மிகப்பெரிய சக்தியாக இருக்கிறது என்னுடைய மனைவி துர்கா அவர்கள்தான்.

**கருணைமிகு தாய்! தூணாக விளங்கும் மனைவி! தன்னம்பிக்கை கொண்ட மகள்!**

அடுத்து, என்னோட மகள் செந்தாமரை. அவர்களை அன்பின் வடிவம் என்றுதான் சொல்லமுடியும். நான் எந்தப் பொறுப்பில் இருந்தாலும், தான் உண்டு, தன்னுடைய வேலைகள் உண்டு என்று அவர் இருப்பார். ஒரு அரசியல்வாதியினுடைய மகள் என்ற சாயல் தன் மேல் விழுந்துவிடக் கூடாது என்று உன்னிப்பாக அதில் உஷாராக இருப்பார். சுயமாக வளர வேண்டும் என்று நினைப்பார். அந்த வகையில் நான் ரொம்ப கொடுத்து வைத்தவன்.

கருணைமிகு தாய் - தூணாக விளங்கும் மனைவி - தன்னம்பிக்கை கொண்ட என்னுடைய மகள் - இந்த மூன்றும் எனக்குக் கிடைத்திருக்கிறது. இதே மாதிரியான பேருள்ளம் கொண்டவர்கள்தான் நீங்கள் எல்லோரும்! மகளிர் அனைவரும்! இத்தகைய மகளிரின் நலம் காத்த மாண்பாளர் என்றால் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

- பெண்களுக்கு சொத்தில் சம உரிமை தந்தார்.
- தலைவர் கலைஞர் அளித்த பணியிடங்களில் பெண்களுக்கு 30 விழுக்காடு இடஒதுக்கீட்டை, இப்போது 40 விழுக்காடு ஆக்கியிருக்கிறோம்.
- உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு தந்தவர் கலைஞர்.

இன்றைக்கு அது 50 விழுக்காடாக உயர்த்தப்பட்டு, அதற்கும் மேலாக பெண்கள் இப்போது மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி, ஒன்றியத் தேர்தல்களில் வெற்றி பெற்று, மக்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

- ஏழைப் பெண்களுக்கு இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்புகள் வழங்கினார்.
- ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களுக்கு முதலில் பள்ளிக் கல்வி வரை இலவசக் கல்வியும், அதன் பிறகு கல்லூரி கல்வி வரை இலவசக் கல்வியும் வழங்கினார்.
- ஒன்று முதல் 5ஆம் வகுப்பு வரையிலான அரசுப் பள்ளி ஆசிரியர்களாக, மகளிரை நியமித்தார்.
- டாக்டர் முத்துலட்சுமி நினைவு மகப்பேறு உதவித்திட்டம்
- மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் நினைவு திருமண உதவித்திட்டம்
- டாக்டர் தருமாம்பாள் நினைவு கைம்பெண் மறுமணத் திட்டம்
- அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித்திட்டம்
- ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழைக் கைம்பெண்களின் மகள்களுக்கான திருமண உதவித்திட்டம்

**திட்டத்திற்குக் கலைஞர் பெயர் சூட்டியது - மிக மிகப் பொருத்தமானது!**

இப்படி எண்ணற்ற திட்டங்களைக் கொண்டு வந்து மகளிர் மு ன்னேற்றத்திற்கு வழிவகை செய்தவர்தான் நம்முடைய தலைவர் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள். அவருடைய பெயரில் மகளிர் உரிமைத் திட்டம் செயல்படுவது என்பது மிக, மிக, மிகப் பொருத்தமானது. அதுவும் அவருடைய நூற்றாண்டில் இது தொடங்கப்பட்டிருக்கிறது.




தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா தமிழினத் தலைவர் கலைஞர் ஆகிய மூவரும் வகுத்துத் தந்த பாதையில் செயல்படுகின்ற அரசுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு. மகளிருக்காக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

## தாய்வழிச் சமூக முறைதான் மனித குலத்தை வழி நடத்துகிறது!

**மகளிருக்கான திட்டங்களுக்கு மகுடம் சூட்டும் மகத்தான திட்டம்!**

விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், நகைக்கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவிக் குழுக்கள் சுழல்நிதி – கடனுதவிகள் என்று மகளிருக்காக ஏராளமான திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்படுத்தி வருகிறது. இது எல்லாவற்றிக்கும் மகுடம் சூட்டக்கூடிய வகையில் தான் இந்தத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்.

1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் மகளிருக்கு இனி மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கப்பட இருக்கிறது. இது உங்களுக்கான உதவித் தொகை இல்லை, உங்களுடைய உரிமைத் தொகை! மீண்டும், மீண்டும் சொல்லுகிறேன். இது உதவித் தொகை இல்லை, உங்களுடைய உரிமைத் தொகை!

உங்களில் ஒருவனான இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், சமூகத்தில் உங்கள் உழைப்பிற்கான அங்கீகாரமாக வழங்குகின்ற தொகை. தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய முதியோர் ஓய்வூதியம், அமைப்பு சாராத் தொழிலாளர்கள் ஓய்வூதியம், கைம்பெண் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டங்களில் ஏற்கனவே பயன்பெற்று வரும் 39 லட்சத்து 14 ஆயிரத்து 81 பயனாளிகளுக்கு, 12 ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்கள் பெற்று வந்த மாத ஓய்வூதியத்தை ஆயிரம் ரூபாயிலிருந்து ஆயிரத்து இருநூறு ரூபாயாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டிருக்கிறேன். இதற்காக, கூடுதலாக 940 கோடி ரூபாய் நிதியை நமது அரசு ஒதுக்கியிருக்கிறது. மொத்தத்தில் பார்த்தால், இன்று மகளிர் உரிமைத் தொகையை பெறும் ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேர் மட்டும் அல்லாமல், உயர்த்தி வழங்கப்படும் ஓய்வூதியம் பெறும் 39 லட்சம் பேரையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், மொத்தத்தில்ஒருகோடியே45லட்சம்குடும்பங்கள் தமிழ்நாடு அரசினுடைய மாத ஓய்வூதியத் திட்டங்களால் பயன் பெற்று வருகிறார்கள்.

**பிற மாநிலங்களும் செயல்படுத்தத் துடிக்கும் கழக அரசின் திட்டங்கள்!**

நாம் கொண்டு வந்த திட்டங்களை இன்றைக்கு இந்தியாவே உன்னிப்பாக கவனிக்கிறது. மற்ற மாநிலங்கள் பின்பற்றத் துடிக்கிறார்கள். 'இந்தியா' கூட்டணிக் கூட்டங்களுக்கு நான் மற்ற மாநிலங்களுக்குப் போகும்போது அங்கே வரக்கூடிய அரசியல் தலைவர்களையும், பிற மாநிலத்தினுடைய முதலமைச்சர்களையும் சந்திக்கின்றபோது நம்முடைய அரசு கொண்டு வருகின்ற திட்டங்களைப் பற்றி ஆர்வமாகக் கேட்கிறார்கள். விசாரிக்கிறார்கள். தங்களுடைய மாநிலத்தில் செயல்படுத்துவதற்கு நினைக்கிறார்கள். கடந்த வாரம் ஜி20 நாடுகளின் மாநாடு டெல்லியில நடைபெற்றது. அதை முன்னிட்டு இந்திய நாட்டின் குடியரசுத் தலைவர் அவர்கள் ஒரு சிறப்பு விருந்து கொடுத்தார்கள். அதில் நானும் கலந்து கொண்டேன். அப்போது, சில ஒன்றிய அமைச்சர்கள் கூட நமது சிறப்புத் திட்டங்கள் பற்றி விசாரித்தார்கள். இவைஎல்லாம்ஏதோ எனக்கு தனிப்பட்ட முறையில் கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுக்களாக நான் கருதவில்லை. தமிழ்நாடு அரசுக்கும், நம்முடைய மக்களுக்கும் கிடைத்திருக்கக்கூடிய பாராட்டுகளாகத்தான் நான் கருதுகிறேன்!

பசிப்பிணியும் போக்கி வருகிறோம் அறிவுப்பசியையும் தணித்து வருகிறோம். இன்னார் படிக்க வேண்டும், இன்னார் படிக்கக் கூடாது என்கின்ற நிலையை மாற்றி, இன்னார் உயரவேண்டும், இன்னார் உயரக் கூடாது என்கின்ற நிலையை மாற்றி, எல்லாருக்கும் எல்லாம் கிடைக்க வழிவகை செய்கின்ற திராவிட மாடல் ஆட்சி, ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்களுக்கு கலைஞர் பெயரில் உரிமைத் தொகை மூலமாக வழங்கிக் கொண்டு வருகிறோம். பெண்களுக்கு சமூக பொருளாதார அரசியல் வலிமையை வழங்கி வருகிறோம்.

என் அருமைச் சகோதரிகளே! உங்கள் சகோதரன் நிறைவாக சொல்ல விரும்புகிறேன்.

**உங்கள் கனவுகளை நிறைவேற்றும் ஆட்சி இது.**

**உங்கள் கவலைகளைப் போக்கும் ஆட்சி இது.**

**தொல்லை, இனி இல்லை.**

**வானமே உங்களது எல்லை!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.




திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் வழங்கப்பட்ட மகளிருக்கு உரிமைத் தொகையாக 1000 ரூபாய் வழங்கப்படும் என்ற வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வழங்கப்படும் என்று அறிவித்ததை தொடர்ந்து, காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை தொடங்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினரும், திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் மகளிருக்கு உரிமைத்தொகை பெறுவதற்கான ஏடிஎம் அட்டைகளை வழங்கி, விழாவில் சிறப்புரையாற்றினார். உடன், மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளருமான திரு.அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்எம்.சி.சண்முகையா, மாவட்ட ஆட்சியர்செந்தில்ராஜ், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் திருமிகு.பிரம்பசக்தி, ஒன்றிய செயலாளர்ரமேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், மாவட்ட அவைத் தலைவர் அருணாச்சலம், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர்,மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

### வடசென்னை நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியில் திருவொற்றியூரில் கட்டப்பட்ட

## அரசு ஆரம்பப் பள்ளிக் கட்டிட திறப்பு விழா! மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமை!

### மேயர் பிரியா திறந்து வைக்கிறார்! கலாநிதி வீராசாமி -கே.பி. சங்கர் எம்.எல்.ஏ.- ஏ.வி. ஆறுமுகம் - வ.முத்துசாமி பங்கேற்பு!

*சென்னை, செப்.16*

*வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட அரசு ஆரம்ப பள்ளிக்கட்டிட திறப்பு விழா மாவட்டக்கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் இன்று (16.09.2023) சனிக்கிழமை), காலை 11.00 மணியளவில் மணலி பாடசாலை தெருவில் நடைபெறுகிறது.*

*இது குறித்து வட்டக் கழகச் செயலாளர் வ.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சென்னை வடகிழக்கு மாவட்டத்தில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப பள்ளிக் கட்டிடத்தை மாவட்டக்கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் மேயர் பிரியா ராஜன் திறந்து வைக்கிறார்.*

*இதில் வடசென்னை நாடாளமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கே.பி. சங்கர் எம்.எல்.ஏ, மண்டலக்குழுத் தலைவர்: ஏ.வி. ஆறுமுகம், வட்டகழக செயலாளர், கணேசன், செல்வம், கரிகாலச்சோழன், பகுதி கழக நிர்வாகிகள், வி.ஜி. தினகரன், ஆர்.டி. ரமேஷ், துர்கா கோதண்டம், நாகலிங்கம், செல்வா, பா. கேபிள்.த.கணேசன், உதயராஜ், வட்டக்கழக நிர்வாகிகள்: ராமச்சந்திரன், கலை, சரவணன், ராஜா, மகேந்திரன், மரியம்மாள், ராஜ்மோகன், முரளிக்குமார், முத்து, விஸ்வம், விமலன், இளைய ராஜா, விக்கி லட்சுமணன், ஜெகன், ஞானமூர்த்தி, ஸ்டாலின், விஜயரங்கன், கிருஷ்ணமூர்த்தி, பழனி, ஜார்ஜ் அந்தோனி, ஆகாஷ், அபிஷேக், கண்ணன், சிலம்பரசன், திவாகர், ஜெனிபர், ரோஸ் சுமதி, லட்சுமி, செல்வா டேவிட் ஆனந்த் மற்றும் பகுதிக்கழக, வட்டக்கழக, இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, ஆகிய நிர்வாகிகள், கலந்துக்கொள்ளுமாறு 21வது வட்டக்கழக செயலாளர் வ.முத்துசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.*


# காஞ்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!








காஞ்சிபுரம் – பச்சையப்பன் ஆடவர் கல்லூரி விளையாட்டுத் திடலில், நேற்று காலை, 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை' தொடங்கி வைக்க வருகைத் தந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை, விழாவில் பங்கேற்ற மகளிர், அகம் குளிர, மனம் மகிழ வரவேற்ற வாஞ்சை மிகு காட்சிகள்!



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், காஞ்சிபுரத்தில் வரலாற்று சிறப்புமிக்க கலைஞர் மகளிர் உரிமை தொகை வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்ததையொட்டி அதன் தொடர்ச்சியாக தருமபுரி மற்றும் நல்லம்பள்ளி பகுதியில் 2000 பெண்களுக்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் உரிமை தொகையினை வழங்கினார்.உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி,நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.டி. என்.வி.எஸ்.செந்தில்குமார்,மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஆர்.ப்ரியா,சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி.வெங்கடேஸ்வரன்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்,கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,முன்னாள் அமைச்சர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன்,மாநில கைம்பெண் வாரிய உறுப்பினர் ரேணுகா தேவி,உதவியாளர் தேவ் ஆனந்த்,மற்றும் இந்தியன் வங்கி அதிகாரிகள் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, நேற்று (15.09.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில், கோடம்பாக்கம் மண்டலம், மேற்கு ஜோன்ஸ் சாலை, ரங்கபாஷ்யம் தெருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளுக்கு வங்கிப்பற்று அட்டையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலக்குழுத் தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மதுரவாயலில் இல்லம் தேடி இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம்!

### செ.ரவி ஏற்பாட்டில் - ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. முன்னிலை! எஸ்.ரமேஷ்ராஜ் பங்கேற்பு!

*சென்னை, செப். 16*

கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா. சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி, மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க. கணபதி அறிவுறுத்தலின்படி, சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்கு பகுதி இளைஞர் அணி சார்பில் இல்லம் தேடி இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா முன்னிலையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் இராமாபுரம் செ.ரவி ஏற்பாட்டில் இன்று (16.9.2023 சனிக்கிழமை) காலை 9 மணிக்கு, 148 வது வட்டம், ஜெயராம் நகர், 1 வது மெயின் ரோட்டில் இல்லம் தேடி இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் 148 வது வட்டக் கழகச் செயலாளர் மேட்டுக்குப்பம் எஸ்.ரமேஷ் ராஜ், இளைஞர் அணியினர், கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மழைநீர் வடிகால் துறை**

ம.நீ.வ.து.ந.க.எண்.0527 / 2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி**
**இரண்டு உறை முறையில் கோரும் அறிவிப்பு**

| வ. எண் | பணியின் விவரம் | பணியின் மதிப்பு (With GST) | முன் வைப்புத் தொகை | ஒப்பந்ததரர் வகுப்பு |
|---|---|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 1, 4, 6, 7, 8, 9, 10, 12 மற்றும் 13ல் உள்ள பல்வேறு இடங்களில் நீர்வழி கால்வாய் மேம்படுத்தும் பணிகள் (8 சிப்பங்கள்) | ரூ.123.61 முதல் ரூ.2221.82 இலட்சம் | பணியின் மதிப்பில் 1% | முதல் வகுப்பு |

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் **25.10.2023 மாலை 3.00 மணி**
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் **https://tntenders.gov.in**
3. ஒப்பம் திறக்கப்படும் நாள் **26.10.2023 மற்றும் நேரம் மாலை 3.30 மணி**

செ.ம.தொ.இ / 5128 / ஒப்பந்தப்புள்ளி / 2023

**கண்காணிப்பு பொறியாளர் / ம.நி.வ.து.**





**இராமசாமி படையாட்சியார்**
அவர்களின்
**106ஆவது பிறந்த நாள்**

தமிழ்நாடு அரசின் சார்பில்
**இராமசாமி படையாட்சியார்** அவர்களின்
திருவுருவச் சிலைக்கு

**மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்,**
**மாண்புமிகு மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,**
**துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள்,**
சீர்மிகு பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்.

**நாள் : 16.9.2023, சனிக்கிழமை நேரம் : காலை 9.00 மணி**
**இடம் : ஹால்டா சந்திப்பு, அண்ணா சாலை, கிண்டி, சென்னை**

**இயக்குநர்**
**செய்தி-மக்கள் தொடர்புத்துறை,**
**சென்னை - 600 009.**

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

செ.ம.தொ.இ/1049/வரைகலை/2023




திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான நேற்று (15.9.2023), ஈரோடு மாநகரத்திற்குட்பட்ட வீரப்பன்சத்திரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட திருவுருவச் சிலையை, முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட வீரப்பன்சத்திரம் பேரூராட்சியாக இருந்தபோது, பேரூராட்சி அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை, தந்தை பெரியார் அவர்கள் தலைமையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 26.10.1969 அன்று திறந்து வைக்கப்பட்டது. தற்போது வீரப்பன்சத்திரம் பேரூராட்சி, ஈரோடு மாநகரத்தோடு இணைக்கப்பட்டு, மாநகரத்தின் ஒரு பகுதியாக உள்ளது. அங்கே அமைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை மற்றும் கட்டுமானம் பழுதடைந்த நிலையில் இருந்ததால், தற்போது பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை மற்றும் சிலை அமைந்த இடம் புதுப்பிக்கப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான இன்று (15.09.2023) கழகத் தலைவரும், முதலைமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.



முதலமைச்சர் அவர்கள் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை காஞ்சிபுரம் மாவட்டத்தில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, வேலூர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று (15.09.2023) கீ.வ. குப்பம் பேருந்து நிலையத்தில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன், நாடாளு மன்ற உறுப்பினர் து.மு.கதிர் ஆனந்த், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார், ப.கார்த்திகேயன், திருமதி.அமுலு விஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் திருமதி.சுஜாதா ஆனந்தகுமார், மாநகராட்சி ஆணையாளர் பி.இரத்தினசாமி, மாந கராட்சி துணை மேயர் சுனில் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.த.மாலதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.


### கலைஞர் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு

# கிராமங்கள்தோறும் தி.மு.க. கொடியேற்றுவது பெருமையாக உள்ளது!

## என்.பஞ்சம்பட்டியில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

ஆத்தூர், செப். 16 -

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிராமங்கள் தோறும் தி.மு.க. கொடியேற்றுவது பெருமையாக உள்ளது என்றும் திமுகவை தொடங்கிய அண்ணாவின் பிறந்த நாளில் தமிழகத்தில் உள்ள இல்லதரசிகளுக்கு திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கும் ரூபாய் ஆயிரம் மகளிர் உரிமைத்தொகை மூலம் விடிவு காலம் பிறக்கிறது என என்.பஞ்சம்பட்டியில் நடைபெற்ற தி.மு.க. கொடியேற்று விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் என்.பஞ்சம்பட்டியில் மறைந்த முன்னாள் முதல்வர் தமிழின காவலர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பாஸ்கா மைதானம் முன்பு பிரம்மாண்டமான தி.மு.க. கொடிக்கம்பத்தில் கொடியேற்றும் விழா நடைபெற்றது. விழாவிற்கு ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளை யார்நத்தம் முருகேசன் தலைமை தாங்கினார். ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஊராட்சிமன்ற தலைவர் பாப்பாத்தி நாகராஜன், துணைத்தலைவர் ஜோசப், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மருதாம்பால் ஆல்பர்ட் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் மெல்வின் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் பிரம்மாண்டமான கொடிக்கம்பத்தில் தி.மு.க. கொடியேற்றிவிட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கிவிட்டு பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதிய கொடிக்கம்பங்களில் தி.மு.க. கொடியேற்றுவது மனதிற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. என்.பஞ்சம்பட்டி கிராமத்தில் ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் என்னற்ற நலத்திட்டங்களை செயல்படுத்தியுள்ளோம். அறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட தி.மு.கழகம் இன்று இந்திய அளவில் பெருமைப்படக்கூடிய இயக்கமாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக அவருடைய பிறந்தநாளான செப்டம்பர் 15ம் தேதி திராவிடமாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மகளிருக்கு வழங்க உள்ள கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை பெண் சமுதாயத்தை முன்னேற்றும் இது உறுதி என்றார். குறிப்பாக தகுதியுள்ள அனைவருக்கும் உரிமைத்தொகை வழங்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். விடுபட்ட நபர்களுக்கும் உரிமைத்தொகை வழங்கப்படும் யாரும் வருத்தப்பட வேண்டாம் என்றதோடு விடுபட்டவர்கள் அதற்குரிய காரணங்களை நீக்கிவிட்டு அவர்களும் மகளிர் உரிமைத்தொகை பெறலாம் என்றார். என்.பஞ்சம்பட்டி கிராமத்தில் திமுக நிர்வாகிகள் ஒற்றுமையுடன் செயல்படுவது மனதிற்கு மகிழ்ச்சி அளிப்பதோடு வரும் பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டனிக்கு அதிக வாக்குகள் பெறும் கிராமமாக என்.பஞ்சம்பட்டி உள்ளது என்றார்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தி.மு.க. தலை மைச் செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி,

ஒன்றிய துணைச் செயலாளர் வசந்தா கென்னடி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப் பட்டி வாஞ்சிநாதன், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தம்பா செல்வகுமார், திமுக நிர்வாகி டாஸ்மாக் வடிவேலு, முன்னாள் ஒன்றிய அவைத் தலைவர் வீரையா, என்.பஞ்சம்பட்டி முன்னாள் கிளைச் செயலாளர்கள் ராஜாமணி, ராபின், ரெமிஜோசப், முன்னிலை கோட்டை புலிப்பாண்டி, உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

நிறைவாக அரசு ஒப்பந்தகாரர் ஜீசஸ் அகஸ்டின் நன்றி கூறினார்.

### களக்காடி எல்லப்பன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

# ஜாபர்கான்பேட்டையில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

## திருவுருவச் சிலைக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, செப்.16-

சைதை மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்ததினத்தை முன்னிட்டு நேற்று (15.9.2023) காலை 9 மணியளவில் ஜாபர்கான் பேட்டை கெங்கையம்மன் கோயில் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு பகுதி அவைத்தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமையில் பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

மேலும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து பொது மக்களுக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் இனிப்பு வழங்கினார்.

இதில் சைதை சம்பத், வி.பி.ஜானகிராமன், சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல் ராமன், எம்.எஸ்.ஹரிபாபு, கோ.பாஸ்கர், ஆர்.கிருஷ்ணகுமார், அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், மு.கதிரவன், பொ.பரத்குமார், டி.எஸ்.முருகன், சாந்தி சுந்தரம், அ.அயாத் பாஷா, இ.வரதன், மா.ஏழுமலை, பூபதி வெங்கடேசன், மு.காளியப்பன், நியூ காலனி சம்பத், வி.பி.சிவக்குமார், வே.புருஷோத்தமன், சைதை சந்திரன், து.முரளி, சி.டி.காசி நாதன், வ.சபரி, அ.சுப்பிரமணி, முகம்மது அலி, யமகா ராஜேஷ், ஜிம் பாபு, ஜெ.ரவிச்சந்திரன், சைதை பாஸ்கர், பூ. பாஸ்கர், பி.டி.சி. ரவி, து.வினோத், பி.பழனி, வ.இளங்கோ, கா.மூர்த்தி, காரைக்குடி செல்வம், நித்தியானந்தம், தண்டபாணி, வி.ஐ.பி.சுரேஷ், கெவின், மு.அருண், ம.திலீபன், மு.அஜீம், ஜெ.கதிரவன், சுதாகர், சி.மதியழகன், பி.தினகரன், சத்யா, சுகுமார், க.தீபன், எஸ்.மல்லிகா, சலூன் ரவி, போட்டோ கல்யாணம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின்115வது பிறந்தநாளை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டக் கழகத்தின் சார்பில் துணைப் பொதுச் செயலாளர் – அமைச்சர் இ. பெரியசாமி திண்டுக்கல்லில் அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் ,பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி மற்றும் கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.




கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில், முதல்வர் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, நேற்று (15.09.2023) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தில்லை நாயகம், 2வது தெருவில் உள்ள எவர்வின் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளுக்கு வங்கிப்பற்று அட்டையினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஆ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை ஆணையர் எஸ்.கே.பிரபாகர், இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி. எஸ். சமீரன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் எம்.சிவகுரு பிரபாகரன், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மேயர் ஆர்.பிரியா தலைமையில் ஏரியா சபா கூட்டம்!

சென்னை,செப்.16-

பெருநகர சென்னை மாநகராட்சி, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு 74 க்குட்பட்ட பகுதிக்கான ஏரியா சபா கூட்டம் இப்பகுதியின் மாமன்ற உறுப்பினர் மற்றும் மேயருமான ஆர்.பிரியா தலைமையில், 74ஆவது வார்டு அலுவலகத்தில் நேற்று (15.09.2023) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஏரியா சபா உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் தங்கள் பகுதியில் மின்விளக்கு வசதி, குடிநீர் வசதி, கழிவு நீர் கால்வாய் அடைப்புகள் சரிசெய்தல்,சாலை அமைத்தல் மற்றும் சீரமைப்பு செய்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் தொடர்புடைய கோரிக்கைகளைத் தெரிவித்தனர். இதன் மீது உரிய நடவடிக்கைகள் எடுத்திட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மேயர் உத்தரவிட்டார். தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மக்களின் கோரிக்கைகள் மீது தீர்வு காணப்படும் என்று மேயர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், வார்டு கமிட்டி செயலாளர் மற்றும் உதவிப் பொறியாளர் சரஸ்வதி, உதவி செயற்பொறியாளர் மாதவசங்கர், ஏரியா சபா செயலாளர் மற்றும் சுகாதார அலுவலர் பால்ராஜ் மற்றும் மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம், மின்துறை, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், காவல் துறை உள்ளிட்ட துறையின் அலுவலர்கள், ஏரியா சபா உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

# திராவிட இயக்க வரலாற்றில் இந்த நாள் பொறிக்கப்படும்!

## கவிப்பேரரசு வைரமுத்து புகழாரம்!



பேரறிஞர் அண்ணாவின்
பிறந்த நாளில்
பிறந்த மண்ணில்
முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்
தொடங்கி வைக்கும்
கலைஞர் மகளிர்
உரிமைத் தொகைத் திட்டம்
தாய்க்குலத்தின்
சுதந்திரத்திற்கும்
சுயமரியாதைக்கும்
பக்கபலமிருந்து
தக்கபயன் நல்குவதாகும்

திராவிட இயக்க வரலாற்றில்
இந்த நாள்
குறிக்கப்படுவது மட்டுமல்ல
பொறிக்கப்படும்

இந்தியாவின்
பிற மாநிலங்களும்
தளபதி ஏற்றி வைக்கும்
இந்தத் திருவிளக்கில்
தீபமேற்றிக் கொள்ளலாம்.



**- கவிப்பேரரசு வைரமுத்து**

### கடலூர் கிழக்கு மாவட்டக் கழக

# மகளிர் அணி - மகளிர் தொண்டர்அணி நிர்வாகிகள் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் கூட்டம், இன்று (16.09.2023 - சனிக்கிழமை) மாலை 3.00 மணி அளவில் சிதம்பரம் அறுபத்தி மூவர் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, கிளை கழக மகளிர் துணைச் செயலாளர்கள், அணி நிர்வாகிகள், மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், மகளிர் மாநகராட்சி மேயர், மண்டலக்குழுத் தலைவர்கள், ஒன்றிய குழுத்தலைவர், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மகளிரணியினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க



பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருத்தணி சட்டமன்ற அலுவலகத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மகளிர் உரிமைத்தொகை வழங்கிய தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார் அருகில் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் பலர் உள்ளனர்.


சொன்னதை செய்வோம்... செய்வதை சொல்வோம்...
தலைவர் கலைஞர்
சொல்வதை செய்வோம்... சொல்லாததையும் செய்வோம்...
திராவிட மாடல் முதல்வர் தளபதி
INDIA கூட்டணி வெற்றி பெற உழைத்திடுவோம்! இன்றே...
நன்றி! நன்றி!! நன்றி!!!
மகளிர் உரிமைத்தொகை
1000 ரூபாயை வழங்கி
தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிட்ட
மாண்புமிகு, திராவிடமாடல் முதல்வர்
கழகத்தலைவர்
அவர்களுக்கு நன்றி!
மாண்புமிகு இராணிப்பேட்டை R.காந்தி
கைத்தறி (ம) துணி நூல் துறை அமைச்சர் - இராணிப்பேட்டை மாவட்ட கழகச்செயலாளர்
முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் M.P.
முன்னாள் மத்திய அமைச்சர் - கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
நன்றியுடன் :
திருத்தணி எஸ்.சந்திரன் B.A.,L.L.B.,M.L.A.
மாவட்ட கழக செயலாளர்
திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.


பேரறிஞர் அண்ணா பிறந்தநாளில்...
முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில்...
காஞ்சிபுரத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை துவக்கி வைத்து
1,06,50,000 மகளிருக்கு
ரூ.1000 வழங்கிய
கலைஞர் 100
1924 - 2023
கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்
மகளிரின் உரிமைக்குரலே!
திராவிட மாடலின் பேரரசே!
நன்றி! நன்றி!! நன்றி!!!
க.சுந்தர் B.Sc.,MLA.,
மாவட்ட கழக செயலாளர்
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.









பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான நேற்று, சென்னை – அண்ணா சாலையிலும் – வள்ளுவர் கோட்டம் முகப்பிலும் உள்ள அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் மலர் மாலை அணிவித்தும் திருவுருவச் சிலைகளுக்குக் கீழே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு மலர் தூவி வணங்கியும் மரியாதை செலுத்தினர். முன்னாள் எம்.பி., டி.கே.எஸ்.இளங்கோவன், முன்னாள் அமைச்சர் பூங்கோதை, மாவட்டச் செயலாளர்கள் நே.சிற்றரசு எம்.சி. மயிலை த.வேலு எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, இ.பரந்தாமன், டாக்டர் எழிலன், ஜெ.ஜெ.எபினேசர், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, ஐட்ரீம் மூர்த்தி, மேயர் திருமதி பிரியாராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கவிஞர் காசிமுத்து மாணிக்கம், கே.எஸ்.ரவிச்சந்திரன், பகுதிச் செயலாளர்கள் எஸ்.மதன் மோகன், மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ் உள்ளிட்டோர் உடன் உள்ளார்கள்.

# ஈரோடு வீரப்பன் சத்திரத்தில் பேரறிஞர் அண்ணா புதுப்பிக்கப்பட்ட திருவுருவச்சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்!

**சென்னை, செப்.16**

**ஈரோடு மாநகரம், வீரப்பன்சத்திரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட திருவுருவச் சிலையை கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்.**

இது பற்றிய அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.9.2023 அன்று ஈரோடு மாநகரத்திற்குட்பட்ட வீரப்பன்சத்திரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் புதுப்பிக்கப்பட்ட திருவுருவச் சிலையை முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட வீரப்பன் சத்திரம் பேரூராட்சியாக இருந்தபோது பேரூராட்சி அலுவலகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை தந்தை பெரியார் அவர்கள் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 26.10.1969 அன்று திறந்து வைக்கப்பட்டது.

தற்போது வீரப்பன்சத்திரம் பேரூராட்சி, ஈரோடு மாநகரத்தோடு இணைக்கப்பட்டு மாநகரத்தின் ஒரு பகுதியாக உள்ளது. அங்கே அமைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை மற்றும் கட்டுமானம் பழுதடைந்த நிலையில் இருந்ததால், தற்போது பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலை மற்றும் அச்சிலை அமைந்த இடம் புதுபிக்கப்பட்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.09.2023 அன்று கழகத் தலைவரும், முதலைமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் சு.முத்துசாமி, அந்தியூர் ப. செல்வராஜ் எம்.பி., மாவட்டச் செயலாளர் என். நல்லசிவம், ஏ.ஜி. வெங்கடாசலம் எம்.எல்.ஏ., மேயர் எஸ். நாகரத்தினம், துணை மேயர் வே. செல்வராஜ், மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட – மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்
## இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

தி.மு.க இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் வருகிற 17–9–2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் வேலூர் மாநகராட்சி புதிய பேருந்து நிலையம் பின்புறம் அமைந்துள்ள பாப்பிஸ் அனுகுலா ரெசிடென்சி அரங்கில், எனது தலைமையிலும் மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ஏ.என்.ரகு, நா.இளையராஜா, ப.அப்துல் மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு கஜேந்திரன், பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா மற்றும் சி.ஆனந்த்குமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள் :**

- **முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு மாரத்தான் போட்டிகள், பேச்சுப்போட்டிகள் நடத்துவது, கலைஞர் நூலகம் அமைப்பது.**
- **இளைஞர் அணி மாநில மாநாடு மற்றும் செயல்வீரர்கள் கூட்டம்.**

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 15–09–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி


எண்ணிலடங்காத் திட்டங்களை நிறைவேற்றி

# ஆன்மிக பெரியோர்கள் பாராட்டுகின்ற வகையில் தமிழ்நாடு அரசு திகழ்கிறது!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

காஞ்சிபுரம், செப்.16 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (15.09.2023) காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சொந்தமான, கீழ்ப்பாக்கம், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள 89 கிரவுண்ட் இடத்தில் திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் வணிக நோக்கில் பயன்படுத்திட ஏதுவாக பொதுநல நிதியிலிருந்து ரூ.1.45 கோடி மதிப்பீட்டில் பாதுகாப்புச் சுவர் மற்றும் தரை சமப்படுத்தும் பணிகளை தொடங்கி வைத்தார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு காஞ்சிபுரம், அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சொந்தமான 120 கிரவுண்ட் நிலம் மீட்கப்பட்டது. இதில் ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியை தொடர்ந்து திருக்கோயில் நிர்வாகம் செயல்படுத்தி தற்போது சுமார் 1,200 மாணவ, மாணவிகள் படித்து பயனடைந்து வருகிறார்கள். பள்ளி இடத்தை தவிர மீதமுள்ள சுமார் 4.50 ஏக்கர் பரப்பிலான இந்த இடத்தை முழுவதுமாக சமன் செய்து சுற்றுச்சுவர் அமைக்கும் பணி ரூ.1.45 கோடி செலவில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

இந்த பணிகள் நிறைவுற்று பொது நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு சுமார் 52,000 சதுரடி பரப்பில் நிகழ்ச்சி அரங்கம் அமைக்கப்பட்டு வாடகைக்கு விடுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் வாயிலாக திருக்கோயிலுக்கு கணிசமான வருமானம் கிடைப்பதுடன் இந்த இடம் மீண்டும் ஆக்கிரமிப்புக்கு ஆளாக்கப்படாமல் தொடர்ந்து திருக்கோயில் வசம் பாதுகாக்கப்படும். இப்பணிகள் இரண்டு மாதங்களுக்குள் நிறைபெறும். அதன் பின்னர் வாடகை நிர்ணயம் செய்து நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு 15 நாட்களுக்கு ஒருமுறை மண்டல அளவிலான, மாநில அளவிலான வல்லுநர் குழு கூட்டம் நடத்தப்பட்டு தொடர்ந்து திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 7,364 திருக்கோயில்களுக்கு மாநில வல்லுநர் குழுவால் திருப்பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் குடமுழுக்குகள் என்பது ஆயிரம் என்பதோடு நின்று விடாமல் ஆயிரமாயிரம் உயர்ந்து திருக்கோயில்களில் திருக்குடமுழுக்கு என நன்னீராட்டு பெருவிழா நடத்துகின்ற தலைசிறந்த அரசாக திகழ்ந்து வரலாற்றில் என்றென்றும் காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் வகையில் தொடர்ந்து குடமுழுக்குகள் நடத்தப்படும்.

திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ராஜ கோபுரத்தை கட்டியபோது அதனை இணைக்கும் 65 படிக்கட்டுகளை கடந்த ஆட்சியில் கட்டிட திட்டமிடாமல் விட்டுவிட்டார்கள். இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் அந்த 65 படிக்கட்டுகளுக்கு டெண்டர் கோரப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த கோபுரத்திற்கு நிலைக்கல் பொருத்துகின்ற பணி எல்&டி நிறுவனத்தின் ஆலோசனை ஏற்று அதற்கான பணிகள் நடந்துக் கொண்டிருக்கின்றன. வெகுவிரைவில் அந்த கோபுரத்தின் வாயிலாக பக்தர்கள் தரிசனத்திற்கு செல்லுகின்ற ஒரு நல்ல சூழலை நிச்சயம் இந்து சமய அறநிலை துறையும் திருத்தணி திருக்கோயில் அறங்காவலர் குழுவும் ஏற்படுத்தி தரும்.

மேலும், நீண்ட காலமாக ஓடாமல் இருந்த திருத்தணி, இராமேசுவரம், சமயபுரம், வடபழனி ஆகிய திருக்கோயில்களின் தங்கத் தேரினை இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் உலா வர செய்தோம். திருத்தணிக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் புதிய வெள்ளித்தேர் செய்யப்பட்டு கடந்த வாரம் பக்தர்கள் நேர்த்திகடன் செலுத்தும் வகையில் உலா வந்தது. இதுபோல் முடங்கியிருந்த திருத்தேர்கள், திருக்குளங்கள் போன்றவற்றை செயல்பாட்டிற்கு கொண்டு வந்த ஆட்சி இந்த ஆட்சியாகும். மேலும், ஏகாம்பரநாதர் திருக்கோயில், நெல்லையப்பர் திருக்கோயில் ஆகியவற்றில் மூடப்பட்டிருந்த ஆயிரம் கால் மண்டபத்தினை பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வந்திருக்கிறோம். இது போன்ற எண்ணிலடங்கா திட்டங்களை நிறைவேற்றி பல்வேறு சிறப்புகளை செய்த அரசு என்பதால்தான் இன்றைக்கு ஆன்மிக பெரியவர்கள் இந்த அரசையும், ஆட்சியையும் பாராட்டி மகிழ்ச்சியோடு வரவேற்கின்றார்கள் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அருள்மிகு ஏகாம்பரநாதர் திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் எம்.வி.எம்.வேல் மோகன், காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் திருமதி இரா.வான்மதி, உதவி ஆணையர் பொ.லட்சுமி காந்த பாரதிதாசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (15.09.2023) காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான சென்னை, கீழ்ப்பாக்கம், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள 89 கிரவுண்ட் இடத்தில் திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் வணிக நோக்கில் பயன்படுத்திட ஏதுவாக பாதுகாப்புச் சுவர் மற்றும் தரை சமப்படுத்தும் பணிகளை தொடங்கி வைத்தார். உடன் ஏகாம்பரநாதர் திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் எம்.வி.எம்.வேல்மோகன், காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் திருமதி இரா.வான்மதி, உதவி ஆணையர் பொ. லட்சுமிகாந்த பாரதிதாசன், செயல் அலுவலர் திருமதி முத்துலட்சுமி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. மற்றும் மலையம்பாக்கம் ஊராட்சி தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு கல்வெட்டு திறப்பு விழா

# (ம) திராவிட முதல்வர் தளபதி ஆட்சியின் இரண்டாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம்

நாள் : 16 – 9 – 2023, சனிக்கிழமை, மாலை 5 மணி | இடம் : வடக்கு மலையம்பாக்கம்

தலைமை : படப்பை **ஆ.மனோகரன்** M.A., M.B.A.,
காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் / குன்றத்தூர் (தெ) ஒன்றிய கழகச் செயலாளர்

வரவேற்புரை : **வாசுகி மகேஷ்**
குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக துணைச் செயலாளர்

முன்னிலை
D.கஜேந்திரன் (மு.ஊ.ம.த.-கி.செ.) E.மகேஷ் (மு.ஊ.ம.த.-கி.செ.) பூங்கொடிபொன்னம்பலம் (ஊராட்சி மன்ற துணைத் தலைவர்) ப.பொன்னம்பலம் (கிளைச் செயலாளர்)
R.முனியன் (கிளைச் செயலாளர்) M.அருள்தாஸ் (ஊ.ம.உ. – கிளைச் செயலாளர்) S.M.எத்திராஜ் (கிளைச் செயலாளர்) M.வெங்கடேஷ் (கிளைச் செயலாளர்)
M.சிவராமகிருஷ்ணன் (ஊ.ம.உ./ இ.அ.செயலாளர்) V.தனலட்சுமி (ஊ.ம.உ.) R.முகஸ்தாரிதுரைராஜ் (கிளைச் செயலாளர்)

கல்வெட்டினை திறந்து வைத்து சிறப்புரையாற்றுவோர்

திருமிகு. **டி.ஆர்.பாலு** M.P.
கழகப் பொருளாளர் / கழக நாடாளுமன்ற குழுத்தலைவர்

மாண்புமிகு **தா.மோ.அன்பரசன்**
குறு, சிறு (ம) நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர்

குத்தாலம் **க.அன்பழகன்** கழக சொற்பொழிவாளர்

**சரஸ்வதி மனோகரன்** – குன்றத்தூர் ஒன்றிய குழுத்தலைவர்
**ஏ.வந்தேமாதரம்** – குன்றத்தூர் (வ) ஒன்றிய கழகச் செயலாளர்
**உமாமகேஸ்வரி வந்தேமாதரம்** – குன்றத்தூர் ஒன்றிய குழு துணைத் தலைவர்

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள்
மு.சுப்பிரமணி வ.நந்தகோபால் இ.மணி சி.பார்த்தசாரதி வி.அரி மு.ராஜேந்திரன் மா.பரிமேலழகன்

மாவட்ட அணிகளின் நிர்வாகிகள்
சங்கீதாவேலு பொன்.ரமேஷ்கவி எஸ்.கர்ணன் கு.ஏழுமலை சி.பாலகிருஷ்ணன் G.A.ராயப்பன் மலர்விழிதமிழ்அமுதன்
க.தினேஷ் ம.ரேவதி எஸ்.வைரம் லட்சுமிஞானசேகர் K.N.C.சத்தியமூர்த்தி V.S.கோதண்டராமன்

மாலை 5 மணிக்கு இறையன்பன் குத்தூஸ் கழக இன்னிசை நிகழ்ச்சி நடைபெறும்

நன்றியுரை : **மா.சே.பிரகாஷ்** ஒ.இ.அ.து.செ.
**ச.ரஞ்சித்குமார்** ஒ.வ.அ.து.அ.

அனைவரும் வாரீர்! வாரீர்!
**குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. - மலையம்பாக்கம் ஊராட்சி தி.மு.க.**


---


சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி
சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இன்தமிழ்க் கலைஞரைப் போற்றும் பாட்டுப் பட்டிமன்றம்

நாள் : 16.09.2023 சனிக்கிழமை
மாலை 5.00 மணி
இடம் : முருகன் கல்யாண மண்டபம்
100 அடி ரோடு, வேளச்சேரி

கலைஞர் 100
1924 - 2023



தலைமை
வேளச்சேரி **வே.ஆனந்தம்** BA., MC
மாவட்ட அமைப்பாளர் – விளையாட்டு மேம்பாட்டு அணி

வரவேற்புரை
மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள்
கே.பிரபு மோ.எழில் இரா.பாஸ்கரன் ஆர்.ஆனந்த் ஏ.ஜி.வேலன் கே.சரவணன்
செ.சதீஷ் எஸ்.கார்த்திக் சி.செந்தில்குமார் ஜி.சதீஷ்குமார் எஸ்.நவீன்குமார்
எஸ்.சுரேஷ் பிரபாகரன் எஸ்.ஏ.மோகன்குமார் இர.தமிழன்பன் வெ.கிஷோர்குமார் ச.ஜெயராம்

முன்னிலை
**அரிமா சு.சேகர்** DCE.,
வேளச்சேரி மேற்கு பகுதி செயலாளர்

மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர்கள்
கௌதம சிகாமணி எஸ்.ஆர்.பார்த்திபன் ஈஸ்வரப்பன் பைந்தமிழ்பாரி
ஆர்.கோபால்ராம் எஸ்.கார்த்திக் மு.வாசிம்ராஜா சுரேஷ் ஜே.மனோகரன்
செல்வி.நிவேதா ஜெசிகா கௌதம் வே.நம்பி

**இன்தமிழ்க் கலைஞரைப் போற்றும் பாட்டுப் பட்டிமன்றம்**
தலைமை : முனைவர்.சுந்தர ஆவுடையப்பன்
தலைப்பு : முத்தமிழறிஞரின் முழுமையான புகழுக்குப் பெருங்காரணம்
சமூகப் பணியே ! – கவிஞர் கோ.பா.ரவிக்குமார், செல்வி சாந்தா
இலக்கியப் பணியே ! – கவிஞர் கார்த்திகா, முனைவர். வே.சங்கர நாராயணன்
இன்னிசை : சென்னை ரமேஷ் இசைக்குழு

பாட்டு பட்டிமன்றத்தை துவக்கி வைப்பவர்
மாண்புமிகு **மா.சுப்பிரமணியன்** B.A.,LLB.,
சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் – மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர்

திரு. **தயாநிதி மாறன்**
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் – மாநில செயலாளர் விளையாட்டு மேம்பாட்டு அணி

முனைவர். **தமிழச்சி தங்கபாண்டியன்**
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

**பிரியா ராஜன்** – வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர்
**மு.மகேஷ்குமார்** – சென்னை மாநகர துணை மேயர்
**JMH அசன் மௌலானா** – வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர்
**ச.அரவிந்த்ரமேஷ்** – சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர்
காரம்பாக்கம் **க.கணபதி** – மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர்
**AMV பிரபாகரராஜா** – விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர்
வேளச்சேரி **பெ.மணிமாறன்** MC – மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர்
வேளச்சேரி **எஸ்.பாஸ்கரன்** MC – மாவட்ட பொருளாளர்
**மகேஸ்வரி முருகவேல்** MC – 175வது வார்டு மாமன்ற உறுப்பினர்

நன்றியுரை: **டி.எசக்கியேல்**
மாவட்ட துணை அமைப்பாளர் – விளையாட்டு மேம்பாட்டு அணி

அனைவரையும் அன்புடன் வரவேற்கும்
**வேளச்சேரி வே.ஆனந்தம்** B.A., MC
176 வது வார்டு மாமன்ற உறுப்பினர் – மாவட்ட அமைப்பாளர்
தி.மு.க.விளையாட்டு மேம்பாட்டு அணி - சென்னை தெற்கு மாவட்டம்

9444129952



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2023) காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளை (17.9.2023) முன்னிட்டு தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், க.சுந்தர் எம்.எல்.ஏ. நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் சி.வி.எம்.பி. எழிலரசன், கு. செல்வப்பெருந்தகை, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### வேலூரில் கழக பவள விழா மற்றும் முப்பெரும் விழா!

# முதல்வருக்கு கழகத்தினர் உற்சாக வரவேற்பு அளித்திடுவீர்!

### மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

வேலூர், செப். 16-

இதுகுறித்து வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. பின்வருமாறு கழகத்தினருக்கு தனது அறிக்கையின் மூலமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வேலூரில் நாளை (17.09.2023 ஞாயிற்றுக்கிழமை) மாலை 05.00 மணி அளவில் நடைபெற உள்ள கழக பவள விழா, கழக முன்னோடிகளுக்கு விருது வழங்கும் முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு விழா பேருரை ஆற்ற இன்று (16.09.2023 சனிக்கிழமை) இரவு 07.00 மணி அளவில் காட்பாடி ரயில் நிலையத்திற்கு வருகை தரும் கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கு கழக பொதுச்செயலாளரும், நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் தலைமையில் மாபெரும் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

எனவே வேலூர் மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு, ஊராட்சி வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களை உள்ளன்போடும், உற்சாகத்தோடும் வரவேற்றிட அனைவரையும் வருக, வருக என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# அண்ணாவின் பெருமையை அளவிடவே முடியாது....



ஆன்மீக காஞ்சியில்
அவதரித்த நாத்திகமே...
வான்மேவு விடிவெள்ளியாய்
வந்துதித்த அண்ணாவே....

எவ்விதப் பின்புலமும்
இல்லாத குடும்பத்தில்
திவ்வியமாய்ப் பறந்திட்ட
செந்தமிழ்ச் செழுஞ்சுடரே....

விழிப்புணர்வு இல்லாமல்
விழிமூடிக் கிடந்தவர்கள்
மொழியுணர்வு பெற்றனர் - அண்ணாவால்
முத்தமிழும் கற்றனர்...

எழுத்தாலும் பேச்சாலும்
எதையுமே சாதிக்கலாமென
அழுத்தமாய் இவ்வுலகிற்கு
அறிவித்தவர் அண்ணா...

திரை உலகில் மறுமலர்ச்சி
திசை எட்டும் புத்துணர்ச்சி
அரசியலில் பெரும்புரட்சி
ஆக்கியவரே அண்ணா....

அப்படி ஓர் புலமை....
அடுக்குமொழி இனிமை....
இப்படியும் ஒரு மனிதரா
என வியக்கும் எளிமை.....

அண்ணா பேசுகிறார்
என்றாலே போதும்
அந்நாளில் மக்கள் வெள்ள
அலைகள் வந்து மோதும்....

சனாதனச் சகதியிலே
தமிழர்கள் வீழாமல்
முனைப்போடு அன்றைக்கே
முழங்கியவரே அண்ணா....

அறிஞர்களே பாராட்டும்
அறிவார்ந்த மேதை......
செறிவுமிகு தமிழுக்கு
செய்தார் பல சேவை.....

அழகான தமிழும்
அன்பான அணுகுமுறையும்
கழகத்தை தமிழ்நாட்டில்
காலூன்ற வைத்தது.....

தலைமைப் பண்பு நிறை
தலைவர் அமைந்துவிட்டால் - கட்சி
தலைநிமிரும் என்பதற்கு
தக்க சான்று அண்ணாவே.....

உதிரிக்கட்சித் தலைவர்களையும்
ஓரணியில் சேர்த்து
எதிர்க்கட்சித் தலைவர்களையும்
ஈர்த்தவரே அண்ணா.....

சரியான நேரத்தில்
சரியான முடிவெடுத்து
அரியணையில் கழகத்தை
அமர்த்தியவரே அண்ணா.....

பெரியாரை விட்டுப்
பிரிந்திருந்த வேளையிலும்
பெரியாரைப் போற்றி நின்ற
பெருந்தகையே அண்ணா...

காமராசர் வென்றபோது
குணாளா குலக்கொழுந்தே - என
மனமுவந்து வாழ்த்திய
மாண்பாளர் அண்ணா....

இளைஞராய் வீறுகொண்டு
இயங்கிய நேரத்தில்
கலைஞரைச் செதுக்கிய
கனிவுமிகு சிற்பி....

பார்போற்றும் நேருவே
பாராட்டும் அளவுக்கு
பாராளுமன்றத்தில்
பார் முழக்கம் செய்தவர்......

மாற்றான் தோட்டத்து
மல்லிகைக்கும் மணமுண்டென
மாற்றாரையும் மதித்திட்ட
மாண்பாளர் அண்ணா.....

கடமை..... கண்ணியம்
கட்டுப்பாடு என்னும்
கொடியைத் தந்துசென்ற
கொள்கை முரசம் அண்ணா....

இன்னும் பல பெருமைகள்
ஏராளம் உள்ளன.....
அண்ணாவை எழுத்தாலே
அளவிடவே முடியாது.....

காலம் பல கடந்தாலும்
கண்ணியமிகு அண்ணாவை
ஞாலமும் மறவாது.....
நாமும் மறவோமே.....!

- கவிஞர் இரவி பாரதி



# பேரறிஞர் அண்ணாவழியே தளபதி ஆட்சி!



1.

பெரியாரைத் தலைவரெனப் பெருமை
யுடன் ஏற்றுக் கொண்டு /
பகுத்தறிவுப் பாதைவழி பீடுறவே
நிலையாய் நின்றே //
எரியொக்கும் கருத்தாலே எதிர்ப்பாரை
எதிர்த்து வென்று /
வெற்றிதனைப் பெற்றவரே வீறார்க்கும்
அண்ணா என்பார் ! //
அரியொக்கும் முழக்கத்தால் ஆரியத்தை
ஓட வைத்தார் ! /
அன்பாலே கழகத்தின் காளையர்க்கே
அண்ணன் ஆனார் ! //
விரிகின்ற கண்ணசைவில் விலகாமற்
கழகம் காத்து /
வெல்கலைஞர் கைகொடுத்துப் பிரிந்து
சென்றார் வையம் விட்டே ! //

2.

பொங்குதமிழ் நாடுபெயர் பொற்புறவே
புலர வேண்டி /
புடவிதமிழ் நாடகத்தே சங்கரனார்
உண்ணா மாய்ந்தார் //
தங்கடனாய் அரசேறித் தமிழ்நாடென்
பெயரும் வைத்தே/
தமிழினத்தின் மகிழ்பொழிவு வெள்ளத்
தில் நீந்திச் சென்றார் ! //
செங்கதிர்போல் ஒளியூட்டி இனத்தமிழர்
வாழ்வும் ஓங்க /
ஈராண்டே ஆண்டாலும் இனப்பகையை
அண்ணா வென்றார் //
தங்கமகன் கலைஞருடை ஆட்சியினைப்
போன்றும் இன்று /
தளபதியின் ஆட்சியதும் அறிஞரண்ணா
வழியே ஆகும் ! //

புலவர் பழ.தமிழாளன்,
இயக்குநர் பைந்தமிழியக்கம்,
திருச்சிராப்பள்ளி.

### 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும்

# ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!’

### காஞ்சிபுரத்தில் நடைபெற்ற எழில்மிகு விழாவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**காஞ்சிபுரம், செப். 16-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான நேற்று (15.9.2023) காஞ்சிபுரம், பச்சையப்பன் ஆடவர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தார்.**

இத்திட்ட தொடக்கத்தின் அடையாளமாக 13 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார்.

அதன் விபரம் வருமாறு:-

**நிதிநிலை அறிக்கையில் மகளிர் உரிமைத் தொகை திட்டம் பற்றிய அறிவிப்பு**

தமிழ்நாடு அரசின் 2023-24ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், “மகளிருக்குச் சொத்துரிமையும், உள்ளாட்சி அமைப்புகளில் தனி இடஒதுக்கீடு அளித்தது முதல், தற்போது கட்டணமில்லாப் பேருந்து பயணம் வழங்கியது வரை, மகளிரின் நலன் காத்து அவர்களது உரிமைகளை நிலைநாட்டுவதில் எப்போதும் அக்கறையுடன் இவ்வரசு செயல்பட்டு வருகிறது. அந்த வரிசையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி, தகுதிவாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு வரும் நிதியாண்டில் மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்படும். வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டான இந்த ஆண்டில், திராவிட இயக்க மாதம் எனச் சொல்லத்தக்க செப்டம்பர் மாதத்தில், தாய்த் தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் பெருமகன் அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்படும்” என்று அறிவிக்கப்பட்டது.

**மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் முதலமைச்சர் விளக்கம்!**

முதலமைச்சர் அவர்கள் 27.3.2023 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அளித்த விளக்கத்தில், “மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்” இரண்டு நோக்கங்களைக் கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக்கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும் அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு 12 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் என்பது, குடும்பத் தலைவிகளுக்கு அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய பெண்கள் என பல்வேறு வகைகளில் தங்கள் விலைமதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து வழங்கி வரும் பெண்கள் இந்தத் திட்டத்தால் பயன்பெறுவார்கள் என்றும், இந்த மகத்தான ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும் என்றும் அறிவித்தார்.

சமுதாயத்தில் உள்ள விளிம்பு நிலை மக்களாகிய சாலையோரங்களில் குடியிருப்போர், பழங்குடியினர், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இதர ஆதரவற்றோர் இந்தத் திட்டத்தில் பயன் அடைவதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும், அவர்களிடம் குடும்ப அட்டை, ஆதார் அட்டை போன்ற தரவுகள் இல்லையென்றாலும் கூட, அவற்றைப் பெறுவதற்கு உரிய வழிவகை செய்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்கு உதவி புரிய வேண்டும் என்றும், எந்தவொரு தகுதியான பயனாளியும் விடுபட்டுவிடக் கூடாது என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களை அறிவுறுத்தி இருந்தார்.

**தருமபுரியில் விண்ணப்பப் பதிவு முகாம்!**

தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 24.7.2023 அன்று தொடங்கி வைத்தார்.

இந்தத் திட்டத்தில் மாநிலம் முழுவதும் விண்ணப்பங்கள் பெற 24.07.2023 முதல் 4.08.2023 வரை முதல் கட்டமாகவும், 5.08.2023 முதல் 14.08.2023 வரை இரண்டாவது கட்டமாகவும், மேற்சொன்ன இரண்டு கட்டங்களிலும், விடுபட்ட வர்களுக்கு 18.8.2023 முதல் 20.8.2023 வரை சிறப்பு முகாம் வழியாகவும் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பதிவு செய்யப்பட்டன.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இணைந்து கொள்ள 1 கோடியே 63 லட்சம் விண்ணப்பங்கள் அரசிற்கு வந்துள்ளது. அவற்றில் தகுதியுள்ள

1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1000/- அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும்.

விண்ணப்பதாரர்களின் விண்ணப்ப முடிவு நிலை குறித்த குறுஞ்செய்தி விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட கைபேசி எண்ணிற்கு 18.09.2023 முதல் அனுப்பி வைக்கப்படும்.

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்தல்!**

பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளான நேற்று, அவர் பிறந்த காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 1 கோடியே 6 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் பயன்பெறும் வகையில், மாதந்தோறும் ரூ.1000/ வழங்கிடும் தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப் பெரிய திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை தொடங்கி வைத்து, 13 மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை வழங்கினார். இந்த திட்டத்திற்காக இந்த ஆண்டுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம். மகாலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் கே. சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன்,

கு. செல்வப்பெருந்தகை, இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, எஸ்.ஆர். ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, வளர்ச்சி ஆணையர் / முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முரு கானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், வங்கிகளின் உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சைதை மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115–வது பிறத் நாளை முன்னிட்டு ஜாபர்கான்பேட்டை கங்கையம்மன் கோயில் அருகில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு பகுதி அவைத் தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமையில், பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சைதை த.சம்பத், வி.பி.ஜானகிராமன், சைதை சாதிக், எம்.எஸ்.அரிபாபு, அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், ஜி.கே. ராமச்சந்திரன், பி.மதிவாணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## எழும்பூர் 78 வது வட்டத்தில் அண்ணா பிறந்தநாள்!

### சொ.வேலு, கே.எஸ்.எம். நாதன் பங்கேற்பு!

சென்னை செப்:16

எழும்பூர் வடக்கு பகுதி 78வது வட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு, புரசை வாக்கம் தாணா தெருவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து கழகத்தினர் மரியாதை செலுத்தினர்.

மேலும் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் இந்தியாவிலேயே முதல்முறையாக குடும்பத் தலைவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் உரிமைத் தொகை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து இனிப்புகள் வழங்கப்பட்டது. இதில் பகுதி செயலாளர் சொ.வேலூர் எம்.சி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம்.நாதன் பொதுக் குழு உறுப்பினர் கோ.மணி,க.நந்தீஸ்வரன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடு வட்டச் செயலாளர் சு.மனோகர்.

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தால்

# உழைக்கும் மகளிரின் சிரமத்தைப் போக்கியிருக்கிறோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, செப். 16-**

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தால் உழைக்கும் மகளிரின் சிர மத்தைச் சற்று போக்கி இருக்கிறோம் என்று சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

"நாட்டிற்கே முன்னோடியான திட்டங்களைச் செயல்படுத்தி திராவிட மாடலில் தமிழ்நாட்டைத் தலைநிமிர்த்தி வருகிறோம்!

காலை உணவுத் திட்டம் மாணவர்களின் வருகையை உயர்த்தி, கற்றல் திறனை மேம்படுத்துகிறது. இப்போது கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தால் உழைக்கும் மகளிரின் சிரமத்தைச் சற்று போக்கியிருக்கிறோம்.

தாயாகக் கருணையையும் மனைவியாக உறுதுணையையும் மகளாகப் பேரன்பையும் பொழியும் மகளிர்க்குத் 'தாயுமானவராகத்' தமிழ்நாடு அரசு தொடர்ந்து செயல்படும்".

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு 169க்குட்பட்ட சைதாப்பேட்டை, பாரதிதாசன் கிழக்கு தெரு, அப்பாவு நகரில் ஏரியா சபை கூட்டம் துணை மேயர் . மு. மகேஷ்குமார் தலைமையில் (15.09.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் தெற்கு வட்டாரதுணைஆணையாளர்எம்.பி.அமித், அலுவலர்கள், ஏரியாசபைஉறுப்பினர்கள்–பொதுமக்கள்திரளாககலந்துகொண்டனர்.

## தலைமை: வேளச்சேரி வே.ஆனந்தம்! சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

# இன் தமிழ்க் கலைஞரைப் போற்றும் பாட்டுப் பட்டிமன்றம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - தயாநிதி மாறன் - தமிழச்சி தங்கபாண்டியன் பங்கேற்பு!

சென்னை, செப்.16

சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இன்தமிழ்க் கலைஞரை போற்றும் பாட்டுப் பட்டிமன்றம் இன்று (16. 9.2023- சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் வேளச்சேரி 100 அடி சாலை முருகன் கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது.

விழாவிற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

கே.பிரபு, மோ. எழில், இரா. பாஸ்கரன், ஆர்.ஆனந்த், ஏ.ஜி.வேலன், கே.சரவணன், செ.சதீஷ், எஸ்.கார்த்திக், சி.செந்தில்குமார், ஜி.சதீஷ்குமார், எஸ்.நவீன்குமார், எஸ். சுரேஷ் பிரபாகரன், எஸ்.ஏ. மோகன்குமார், இர.தமிழன்பன், வெ.கிஷோர்குமார், ச.ஜெயராம் ஆகியோர் வரவேற்கின்றனர்.

வேளச்சேரி மேற்குப் பகுதிச் செயலாளர் அரிமா சு. சேகர், கௌதம சிகாமணி, எஸ்.ஆர்.பார்த்திபன், ஈஸ்வரப்பன், பைந்தமிழ் பாரி, ஆர்.கோபால்ராம், எஸ். கார்த்திக், மு.வசிம்ராஜா, சுரேஷ், ஜே.மனோகரன், செல்வி நிவேதா, ஜெசிகா, கௌதம், வே.நம்பி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இன் தமிழ்க் கலைஞரை போற்றும் பாட்டுப் பட்டி மன்றத்தில் முத்தமிழறிஞரின் முழுமையான புகழுக்கு பெருங்காரணம் சமூகப் பணியே, இலக்கியப் பணியே எனும் தலைப்பில் முனைவர் சுந்தர ஆவுடையப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

சமூகப் பணியே எனும் தலைப்பில் கோ.பா.ரவிக்குமார், வழக்கறிஞர் செல்வி சாந்தாவும், இலக்கியப் பணியே எனும் தலைப்பில் கவிஞர் கார்த்திகா, முனைவர் வே.சங்கர நாராயணன் ஆகியோர் கலந்துகொண்டு வாதாடு கின்றனர்.

இந்நிகழ்ச்சியை அமைச்சர்- மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்.

மேலும் இதில் தயாநிதி மாறன் எம்.பி., தமிழச்சி தங்க பாண்டியன் எம்.பி. , மேயர் பிரியா ராஜன், துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எம்.எச்.அசன்மௌலானா , ச.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, கவுன்சிலர்கள் வேளச்சேரி பெ.மணிமாறன், எஸ்.பாஸ்கரன், மகேஸ்வரி முருகவேல் உள்ளிட்ட பலர் கலந்துகொள்கின்றனர். நிறைவில் டி.சக்திவேல் நன்றி கூறுகிறார்.

## வி.ராமநாதன் தலைமை! கே.பி.சொக்கலிங்கம் முன்னிலை!

# திருவொற்றியூரில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா !


## கழக மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. புகழஞ்சலி!

சென்னை,செப்.16 .

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் திராவிட இனத்தின் ஆத்திச்சூடி அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் மாநில மீனவர் அணி சார்பிலும் வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் முன்னிலையில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராமநாதன் தலைமையில் மாநில மீனவர் அணி துணைத் தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் அஜாக்ஸ் என்ஃபீல்டு தொழிற்சாலை அருகில் உள்ள அண்ணா அவர்களின் திருவருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி புகழஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், மு.துணை செயலாளர் இ.ரமேஷ், வட்ட கழக செயலாளர்கள் இரா.சந்தர், ஏகா.கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன், பி.எஸ். சைலஸ், எஸ்.மகேந்திரன், தலைமை கழக பேச்சாளர்கள் எழுப்பூர் கோபி, வாசு. கருணாநிதி, ஆர்.விவேகானந்தன், பண்ணை சந்திரசேகர், கொசப்பூர் ரவிச்சந்திரன், டைலர் மணி, கே.சந்தோஷ் குமார், கலை கே.சரவணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன் குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி பாலஉமாபதி, மீனவரணி எஸ்.செல்வம், மாவட்ட வர்த்தகர் அணி பிரட் சுரேஷ், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் ஜெகன், பகுதி மீனவரணி ஆர்.பிரகாஷ், எம்.எல். வேலன், எம்.எஸ்.ரவி, கே.எஸ்.ஆனந்தன், ஜெ.கருணாநிதி, இரா.கணேசன், ஜெ.ஆர்.டி.சேகர், எஸ்.விஜயராகவன், தச.எழிலன், மணலி வி.குமார், சின்ன சேக்காடு வசந்தராஜ், புரூட்டஸ் செல்வதாஸ், பரணிகுமார், மூ. ராம் குமார், பி.கஜா, எஸ். எம்.கமல்

5 வது வட்ட கழக நிர்வாகிகள் அவைத் தலைவர் சி. சார்லஸ், துணை செயலாளர் கே.ரமேஷ், ஆட்டோ ராஜவேல், ஆர்.எம்.செல்வம், நெய்தல் நகர் ஜோதி, லோகநாதன், இப்ரகிம் பாய், வசந்தகுமார், சரவணன், அந்தோனி, இளங்கோ, அலெக்ஸ், வில்சன், கபடி குமார், ஜோசப், தல ரமேஷ், பெருமாள் மற்றும் கழக தோழர்கள் கலந்துகொண்டு புகழஞ்சலி செலுத்தினார்.



தாம்பரம் மாநகர திமுக சார்பில் முப்பெரும் விழாவை முன்னிட்டு நேற்று, தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவசிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். உடன் மண்டலத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்களும் மாநகர பகுதி வட்ட கழக நிர்வாகிகளும் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களும் கழகத்தின் முத்த முன்னோடிகளும் பெரும் திரளாக கலந்து கொண்டனர். அதற்கு முன்பாக சண்முகம் சாலையில் பூக்களால் அலங்கரித்து வைக்கப்பட்ட பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மண்டலத் தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன் தலைமையில் நூற்றுக்கணக்கான கழக தோழர்களுடன் அமைதி பேரணியாக சென்று மாநகராட்சி அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அவர்கள் கழக தோழர்களுடன் உறுதி மொழி ஏற்றார்

## அண்ணா, உம் பிறந்தநாள்!

# கண்ணாரப் போற்றுவோம்; காலமெலாம் ஏற்றுவோம்!

கல்வியிற் கரையிலாத
கச்சிமா நகரென்று
சொல்லிய சொல்லினைத்
துலக்கிடும் தோன்றலே!
எல்லாமும் அறிந்தவரே,
எங்களின் அண்ணாவே!
நல்ல தாய் பங்காரு
நடராசர் தவத்தினில்
செல்லமாய்ப் பிறந்தவரே;
திராவிடம் திறந்தவரே!

பல்லாற்றல் பெற்றவர்நீர்;
பைந்தமிழ்க் கொற்றவர்நீர்;
சொல்லாற்றல் மிக்கவர் நீர்,
சூரியன் தந்தவர் நீர்!
வில்லாற்றல் எல்லாம்உம்
வினையாற்றல் முன்னாலே
புல்லாற்றல் ஆகுமே,
பொசுங்கித்தான் போகுமே!

வல்லோரே அரசியலில்
வாளோச்சிக் கிடந்தபோது
இல்லோரும் எளியோரும்
இளைஞரும்
ஏழையரும்
கல்லூரி பயின்றோரும்
கலைகளிற் சிறந்தோரும்
நல்லோரும் அரசியலில்
நாட்டத்தைக் கொண்டால்தான்
கல்லாரும் மகளிரும்
காலத்தின் நிலையுணர்வர்;
வல்லாண்மை செய்கின்ற
வலியோரை நீக்குவர்;
நல்லாட்சி மக்களாட்சி
நாட்டிலே நிலவுமெனச்
சொல்லாலும் எழுத்தாலும்
சுடரேற்றிப் பெரியார்பின்
பல்லாண்டு நடந்தவரே;
பகுத்தறிவு தன்மானம்
இல்லாமல் வாழ்வதோர்
ஈனமெனப் பகர்ந்தவரே!
பொல்லாத ஆரியப்
புதைகுழியைத் தூர்த்தவரே!
இல்லாதது ஒன்றில்லை
இங்கென ஆர்த்தவரே!

அல்லும்நற் பகலுமாய்
அயராமல் பேசியும்
நல்லவை எழுதியும்
நடப்பதோ அரிதாதல்
மெல்லமெல்ல உணர்ந்ததால்
மேலெழுந்த கருத்தொன்று!

செல்லாமல் அரசியலில்
சீர்திருத்தம் மட்டுமே
சொல்லுவது போதாது;
துடிப்பாகத் தேர்தலில்
நில்லாமல் ஏதொன்றும்
நிகழ்த்துதல் இயலாது;
மெல்லுவதால் வெறும்வாயை
மீண்டெழல் ஆகாது!
மெல்லவே ஆராய்ந்து
மேன்மையுறத் தமிழ்நாடு
நல்லதோர் இயக்கமாய்
நாடாளும் கழகமாய்த்
தில்லியோர் அஞ்சிட,
தி மு க அரசியலில்
வெல்லவே நிறுவியவர்!
வித்தகப்பேர் அறிஞர்நீர்!

நில்லாமல் ஓடுகின்ற
நீர்ஆறு போலநீர்
செல்லாத ஊரில்லை;
செப்பாத மேடையில்லை;
சொல்லாத விளக்கமில்லை;
தூண்டாத எழுச்சியில்லை;
வெல்லாத கருத்துமில்லை;
வீழ்த்தாத கட்சியில்லை!

கல்லாத முரடரும்
கயவரும் மடையரும்
இல்லாத தெலாம்சொல்லி
இழிவையும் ஏச்சையும்
மெல்லாது மென்றனர்;
மேன்மேலும் அடுக்கடுக்காய்த்
தொல்லைகள் செய்தனர்;
துணையாக அன்றுஆண்டோர்
எல்லைகள் மீறியே
இடர்களைச் செய்தனர்!

மல்லராய். அண்ணா,நீர்
மார்பேந்தி நிமிர்ந்ததும்
வல்லமைத் தோழர்கள்
வாய்மையாய் நின்றதும்
அல்லவோ கழகத்தை
ஆண்டிருபது ஆகுமுன்னே
வெல்லவைத்து ஆட்சியில்
வீற்றிருக்கச் செய்தன!

செல்லரித்த நிலையாகத்
தீர்ந்தனர் எதிர்த்தவர்கள்!
புல்லரித்து நின்றது
புவியெலாம் உம பெருமை
கல்லெழுத்தாய் ஆனது ;

கழகமென்றும் ஆள்வது
நல்லெழுத்தாய் மாறுது;
நாட்டுக்குச் சீரது!



எந்நாளும் நிலையாக
இலகுகின்ற ஏந்தல்,எம்
அண்ணா,நீர் இல்லமால்
அருந்தமிழ் நாடென்றோ
மண்ணாகிப் போயிருக்கும்;
மடமையே வளர்ந்திருக்கும்!
பெண்ணடிமை மிகுந்திருக்கும்;
பேதைமை செழித்திருக்கும்;
விண்ணுலகக் கதைகளோ
வேகமாய்க் கிளைத்திருக்கும்;
பண்ணிசைத் தமிழ்ப்பாட்டோ
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும்;
எண்ணுகிற திறனிங்கே
இல்லாமல் அழிந்திருக்கும்;
உண்ணுகிற உணவுடன்
உறிஞ்சுகிற நீருமே
கண்ணுக்குப் படாமலே
காணாமல் மறைந்திருக்கும்;
தண்காவிரி ஆற்றில்நீர்
ததும்பாமல் வறண்டிருக்கும்;
அண்டிவந்து இந்திதான்
ஆர்ப்பாட்டம் செய்திருக்கும்;
தொண்டி,புகார் மாமதுரைத்
தொன்மையெலாம்
புதைந்திருக்கும்;
வண்டிவண்டி யாய்ப்புராணம்
வலம்வந்தே சிதைத்திருக்கும்!

எண்டிசையும் புகழ்மேவ
இலகும் பேர் தமிழ்நாடு
விண்டுரைத்து மகிழ்ந்திட
விளங்காமல் போயிருக்கும்;
பண்டைநாள் சீர்திருத்தம்
பகுத்தறிவு தன்மானம்
கொண்டிருந்த
திருமணம்
கொற்றம்விட்டு அகன்றிருக்கும்;
குண்டுகள் போடாமல்
கொல்லுகிற அரசியல்
கண்டிருக்கும் வடபுலத்துக்
கயமைதான் சூழ்ந்திருக்கும்!
தண்டமிழ் நாடன்று தவித்தழுது
புலம்பிட
எண்டிசைத் தமிழரும்
இதயம்நொந்து இரங்கிடக்
கண்டிராப் பெருந்திரளில்
கடலோரம் சென்றுவிட்டீர்!

**பேராசிரியர்**
**மா.செல்வராசன்**

கல்லறைக்குச் சென்றாலும்
கலைஞர்தாம் உம்முடைய
நல்லிதயம்
பெற்றதனால் நாடாண்டார்
ஆண்டுபல!
இல்லைஅவர்க்கு
ஈடென
இயம்புகின்றார் இன்றுமே!
முல்லை அவர் ஆட்சிதான்;
முன்னேற்றம் சாட்சிதான்!
தொல்லைபல இடையிடையே
துளிர்த்திருந்தும் தளபதி
இல்லையென அவற்றினை
இங்கொழித்த பெருமிதத்தில்
வெல்லவே செய்கின்றார்;
விளங்கவே உம்பேர்தான்
நல்லாட்சி புரிகின்றார்;
நானிலத்தார் புகழ்கின்றார்!

நல்லுரைகள் நீர்அன்று
நயமாக் நவின்றவை
எல்லாமே எங்களின்
இதயங்கள் இருப்பதனால்
வல்லாண்மை எதிர்க்கின்றோம்;
வடவரைத் தடுக்கின்றோம்;
பொல்லாத மதவெறிப்
புன்மையைத் தகர்க்கின்றோம்!
அண்ணா, நீர்பிறந்த
அறிவுநகர் காஞ்சியில்தான்
எண்ணற்ற கோயில்கள்
இரவுபகல் பூசைகள்
கண்ணுற்று வளர்ந்தநீர்
கடவுளெனும் பேராலே
விண்ணுலகப் பொய்க்கதைகள்
விரித்துரைத்து வேதியர்கள்
மண்ணிலே மக்களிடம்
மடமையிருள் வளர்த்திருக்க
உண்மையினைச் சான்றுகளால்
ஊரறிய உரைத்தவரே
கண்மயக்கும் ஆரியர்
கற்பனைகள் கலைத்தவரே
உண்மயக்கச் செல்வர்தம்
ஓங்காரம் ஒழித்தவரே!

ஆரிய மாயை நீர்
அன்றெழுதி எமக்களித்த
சீரிய ஆவணம்;
திறனாய்வுப் புத்தகம்!
ஆரிய மாயையினை
அம்பலப் படுத்தியதால்
கூரிய சொற்களால்
குத்தியே கிழித்ததனால்
காரியப் பூணூலார்
கடுஞ்சிறையில் உமையடைக்கப்
பூரிப்புக் கொண்டனர்;
புத்தெழுச்சி கண்டவுடன்
வாரியே சுருட்டினர்;
வாலையும் சுருக்கினர்!
வீரியம் அற்றதன்று
விளையாடப் பார்க்குதின்று!
ஊறிய பழமையில்
உருவான சனாதனம்
நாறிய நிலையிலே
நகர்த்திட வேண்டுமென்றால்
சீறியே கிளம்புகின்றார்
தில்லிதான் காக்குமென்று!
ஆறிய கஞ்சிகள்;
அற்றுவிழும் பிஞ்சுகள்!

அண்ணா,உம் பேரின்றி
அரசியல் இங்கில்லை;
உண்மையில் நீர்இன்றி
ஒன்றுக்கும் உயிர்ப்பில்லை;
வண்மையாய்க் கழகவிதை
வைத்தூன்றி வளர்த்தவர்நீர்;
திண்மையாய் என்றும்அது
திகழ்ந்திடச் செய்தவர்நீர்;
பெண்மயக்கம் உற்றவர் உம்
பேர்வைத்தே வென்றுள்ளார்;
கண்மயக்கக் காரிகை,உம்
காலடியே சென்றுள்ளார்;
பண்மயக்கப் பேச்சாலே
பல்லறிவின் எழுத்தாலே
மண்மயக்கம் உற்றதன்றோ!
மக்களும் உணர்ந்தரன்றோ!
தண்டமிழ் நாடென்றும்
தங்களின் வழியன்றிக்
கண்டவர்பின் செல்லாது;
கழிவிரக்கம் கொள்ளாது!
விண்டுரைத்தால் தளபதி
விழைவதும் உம்வழியே!

சூழ்ச்சியிலா அரசியலைச்
சூத்திரமாய் உரைத்தவர் நீர்;
காழ்ச்சிந்தை மறச்செயல்கள்
கட்டோடு மறுத்தவர்நீர்;
கீழ்ச்செயல்கள் ஏச்சுரைகள்
கேட்டாலும் பொறுத்தவர்நீர்;
ஆழ்மனத்தால் எதனையும்
ஆராய்ந்து நிறுத்தவர்நீர்;
ஊழ்ச்செயல் என்றுரைத்தே
உழையாதார் வெறுத்தவர்நீர்;
தீச்செயல் உமக்கெவர்
செய்தாலும் சிரித்தவர்நீர்;
வாழ்வெலாம் எளிமையே
வசந்தமாய் வரித்தவர்நீர்;
தாழ்விலாத் தமிழ்நாடு
தழைப்பதை விழைந்தவர்நீர்;
வீழ்ச்சியின்றித் தமிழர்கள்
விளங்கிட விதைத்தவர்நீர்!

உம்மைப்போல் உரையாற்ற
ஒருவரும் இங்குண்டோ?
செம்மைஉம் எழுத்துப்போல்
தீட்டுதற்கு எவருமுண்டோ?
வெம்மையும் கிளர்ந்திருக்கும்:
வித்தகம் வளர்ந்திருக்கும்;
தண்மையும் செழித்திருக்கும்;
தறுக்கரைக் கழித்திருக்கும்;
மும்மையும் நிலைத்திருக்கும்;
முத்தமிழ் நிறைந்திருக்கும்;
தம்மையே தமக்கீடாய்ச்
சாற்றிடும் தலைமையன்றோ!
அம்மையாய் அப்பனாய்
அறிவூட்டல் போலவே
எம்மையும் ஆட்கொண்டீர்;
என்றுமே வாழும்நீர்!

அண்ணா,உம் பிறந்தநாள்
அருந்தமிழர் சிறந்தநாள்
கண்களைத் திறந்தநாள்
காட்சிகள் விரிந்தநாள்
புண்களை மறந்தநாள்
புன்மையைத் துறந்தநாள்
கண்ணியம் கடமையுடன்
கட்டுப்பாடு என்றுமனம்
எண்ணுதல் அறிந்தநாள்
இயங்குதல் புரிந்தநாள்
திண்மையே செறிந்தநாள்
செந்தமிழ் நிறைந்தநாள்
தண்மையே விளங்கும்நாள்
தன்னலம் விலக்கும்நாள்
உண்மையே, தமிழராளும்
உரிமையை உணர்ந்தநாள்
நண்ணாரும் விழையும்நாள்
நல்லவை விளையும்நாள்
கண்ணாரப் போற்றும்நாள்;
காலமெலாம் ஏற்றும்நாள்!




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2023) பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி, காஞ்சிபுரத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு இல்லத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம். மகாலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் கே. சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.9.2023) பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி, காஞ்சிபுரம், மாநகராட்சி வளாகத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி எம். மகாலட்சுமி, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் கே. சுந்தர், சி.வி.எம்.பி. எழிலரசன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட டெபிட் கார்டு வெறும் கார்டு மட்டுமல்ல

# மகளிர் வாழ்க்கையை மாற்றப் போகின்ற துருப்புச் சீட்டு!

## சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் திட்டத்தை துவக்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை,செப்.16–**

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட டெபிட் கார்டு வெறும் கார்டு மட்டுமல்ல மகளிர் வாழ்க்கையை மாற்றப்போகின்ற துருப்புச்சீட்டு என்று சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் திட்டத்தை துவக்கி வைத்து கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருமித்துடன் குறிப்பிட்டார்.**

**இதுகுறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருாமறு:**

தந்தை பெரியார் வழியில், பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில், கலைஞரின் நூற்றாண்டில், ஒரு கோடியே ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட'த்தை காஞ்சிபுரத்தில் இன்று துவக்கி வைத்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் அனைவரும் இங்கு நிகழும் ஒரு நெகிழ்ச்சியான மகிழச்சியான தருணத்திலே இருக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றோம். இங்கு நடைபெற்றிருக்கக்கூடிய இந்த விழா, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு விழா.

தமிழ்நாட்டு வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருக்கக் கூடிய நிகழ்ச்சி, இந்த நிகழ்ச்சி. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்த ஒரு மிக முக்கியமான ஒரு வாக்குறுதி.

**வாக்குறுதியை நிறைவேற்றிய தலைவர்!**

இரண்டு ஆண்டுகளாக இந்த வாக்குறுதி எப்போது வரும் என்று ஒட்டுமொத்த தமிழகமும், இல்லை ஒட்டுமொத்த இந்தியாவும் காத்திருந்த நிகழ்ச்சி இந்த நிகழ்ச்சி.

அந்த வாக்குறுதியை இன்று நம்முடைய தலைவர் அவர்கள் இன்று நிறைவேற்றிக் காட்டி இருக்கிறார்கள். தமிழ்நாட்டு மகளிருடைய ஒட்டுமொத்த எதிர்பார்ப்பும் இன்று நிறைவேறிருக்கிறது.

அண்ணாவின் தம்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய தொகுதி, அவர் நின்று வென்ற தொகுதி இந்த சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியில் இந்தத் திட்டத்தை நான் இன்று துவக்கி வைக்கின்றேன். தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட ஒரு கோடியே ஆறு இலட்சத்து ஐம்பதாயிரம் மகளிர் இந்தத் திட்டத்தினால் பயன்பெறப் போகிறார்கள்.

இந்தத் திட்டம் தமிழ்நாட்டு மகளிர் முன்னேற்றத்தில் பெரும் பங்காக அமைய இருக்கின்றது. இன்றைக்கு உங்களுடைய கைகளில் வழங்கப்பட்டுள்ள கலைஞர் மகளிர் திட்டத்துக்கான அந்த டெபிட் கார்டு வெறும் கார்டு மட்டுமல்ல, உங்களுடைய வாழ்க்கையை மாற்றப் போகின்ற துருப்புச் சீட்டு என்பதை நீங்கள் உணர வேண்டும். இந்தத் திட்டம் இன்றைக்கு இந்திய ஒன்றியத்தையே திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

பெண்ணுரிமை குறித்து தந்தை பெரியார் கண்ட கனவுகளுக்கெல்லாம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்னவெல்லாம் செய்தாரோ அவருடைய வழியில் அவரைத் தொடர்ந்து இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மகளிர் முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். எனவே தான் இந்த அரசை அனைவரும் திராவிட மாடல் அரசு என்று பெருமையாகக் கூறுகின்றோம்.

பெண்ணுரிமை, மகளிர் முன்னேற்றம் என்று வருகின்ற பொழுது மகளிர் முன்னேற்றம் எந்தெந்த வழியில் எல்லாம் தடுக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி தந்தை பெரியார் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியுள்ளார்கள். மகளிர் முன்னேற்றம் மூன்று வழிகளில் தடுக்கப்பட்டிருக்கிறது என்று, பெரியார் சொன்னார். இந்த மூன்று தடைகளையும் நீக்கினால், மகளிர் சுதந்திரமாக வாழக்கூடிய நிலைமை ஏற்படும் இதுதான் தந்தை பெரியார் அவர்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தார்.

**பெண் அடிமைத் தனம் பற்றி தந்தை பெரியார்!**

மகளிர் முன்னேற்றத்திற்கு கலாச்சார ரீதியாக இருந்த தடைகள் என்னென்ன? தந்தை பெரியார் அவர்களே சொன்னார். பணக்காரன், ஏழை என்ற அந்த அடிமைத்தனத்தை




விட, மேல் ஜாதி, கீழ் ஜாதி என்ற அந்த அடிமைத்தனத்தை விட, முதலாளி, தொழிலாளி என்ற அந்த அடிமைத்தனத்தை விட மிக மிக மோசமானதுதான் இந்த ஆண் பெண் அடிமைத்தனம் என்று தந்தை பெரியார் அவர்கள் சொல்வார்.

அதிலும் கொடுமையானது, விதவை என்று சொல்லி நடத்தப்படுகின்ற அந்தக் கொடுமை. அதோடு மட்டுமல்ல மகளிர் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது, பெண்களுக்குப் படிப்பு தேவையில்லை, குடும்பத்தைப் பார்த்துக் கொள்வது மட்டும்தான் பெண்களுக்கான வேலை. இப்படித்தான் நமது சமுதாயம் இருந்து வந்தது.

இவை எல்லாவற்றையும் எதிர்த்துப் பெண்களுக்கான அந்த உரிமைக் குரலைக் கொடுத்ததுதான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம். குழந்தைத் திருமணத்திற்கு எதிராக அன்றைக்கு மட்டுமல்ல இன்றைக்கும் குரல் கொடுத்துக் கொண்டிருப்பது தான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம்.

**சொத்தில் பெண்களுக்கு சம உரிமை!**

சட்டரீதியாக, பெண்களுக்கு இருந்த முட்டுக்கட்டை என்ன? ஆண்களுக்கு மட்டும்தான் குடும்பத்தில் இருக்கக் கூடிய சொத்தில் உரிமை இருந்தது. பெண் பிள்ளைகளுக்குச் சொத்திலே உரிமை கிடையாது என்ற அந்த நிலைதான் சட்டரீதியாக இருந்தது.

ஆனால், நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சொத்திலே பெண்களுக்குச் சம உரிமை உண்டு என்ற சட்டத்தை 1989ஆம் ஆண்டு அதை நிறைவேற்றினார்.

அவர் நிறைவேற்றிய இந்தச் சட்டம் 30 ஆண்டுகளுக்கு பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சம உரிமை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. எப்போது? கலைஞர் நிறைவேற்றி முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, உச்ச நீதிமன்றத்தில் நிறைவேற்றினார்கள்.

இன்றைக்கு எல்லா பெண்களுக்கும் சொத்திலே சம உரிமை கிடைத்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகமும், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும்.

அடுத்ததாகப் பொருளாதார ரீதியில் பெண்களுக்கு இருக்கக்கூடிய முட்டுக்கட்டைகள் என்னென்ன? முதலில் பொருளாதார ரீதியில், பெண்களுக்கு நிலை என்னவாக இருக்கிறது என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு பெண் சிறுமியாக இருக்கும் பொழுது குழந்தையாக இருக்கும் பொழுது தனது அப்பாவை, அம்மாவை எதிர்பார்க்க வேண்டும். அந்தப் பெண் வளர்ந்து திருமணம் ஆனதும் பணத்திற்காக, கணவனை எதிர்பார்க்க வேண்டும். அந்தப் பெண் வயது முதிர்ந்த பின்பு, முதிர்ந்த காலத்தில் பணத்திற்காகத் தனது மகனையோ, மகளையோ எதிர்பார்க்க வேண்டும். இப்படிதான் பெண்களுடைய நிலைமை இருந்தது.

**திராவிட மாடல் அரசு பெண்களுக்கு முக்கியத்துவம்!**

இந்த நிலைமை மாறி, மகளிர் ஆண்களுக்குச் சமமாக வளர வேண்டுமென அவர்களும் ஆண்களைப் போல தாங்கள் விரும்பிய கல்வியைக் கற்க வேண்டும். தங்கள் அறிவுக்கும், ஆற்றலுக்கும் ஏற்ற வேலையில் சேர வேண்டும். பணியாற்ற வேண்டும். எனவேதான் நம்முடைய திராவிட மாடல் அரசு பெண்கல்விக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

அரசு பள்ளியில் படித்துக் கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்கு ஏற்கனவே புதுமைப்பெண் என்ற திட்டத்தின் மூலம் அந்த மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை அளிக்கப்படுகின்றது.

படிப்பிற்காக அல்லது வேலைக்காக மகளிர் பயணம் செய்வதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றப்பின் இட்ட முதல் கையெழுத்து மகளிர்க்குக் கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம்.

இதுவரை நம்முடைய கழக அரசு நிறைவேற்றிய மகளிர் முன்னேற்றத் திட்டங்களில் முதன்மையான திட்டம் என்று சொல்லக்கூடிய திட்டம்தான் இந்தக் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்.

கலைஞருடைய நூற்றாண்டில் நிறைவேற்றி இருக்கக் கூடிய ஒரு முத்தாய்ப்பான ஒரு திட்டம். இந்தத் திட்டத்திற்கு நம்முடைய முதலமைச்சர் வைத்திருக்கக்கூடிய பெயர் மிக மிக முக்கியமானது. இது மகளிர் உதவி தொகைத் திட்டம் அல்ல இது மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் என்று பெயர் வைத்திருக்கின்றார்.

உங்களுடைய உழைப்பிற்கு ஒரு அப்பாவாக, அண்ணனாக இருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த அங்கீகாரத்தை இப்போது உங்களுக்கு அளித்திருக்கின்றார்கள்.

**உயர்பதவிகளில் பெண்கள்!**

உங்களுடைய தம்பியாக, உங்களுடைய மகனாக இருந்து இதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இது உங்கள் உழைப்புக்கான உரிமைத் தொகை. ஆகவே தான், இந்தத் திட்டத்திற்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் என்று தலைவர் அவர்கள் பெயரிட்டிருக்கிறார்கள்.

மகளிர் கல்வியிலே, பொருளாதாரத்திலே உயர வேண்டும். அதேபோல, பொது வாழ்க்கையிலும் மகளிர் அதிகமாக ஈடுபட வேண்டும். அப்போதுதான் உங்களுக்கான உரிமைகளை நீங்கள் வலியுறுத்திப் பெற முடியும். இப்பொழுது உள்ளாட்சிப் பதவிகளில் 50% மகளிர் வந்திருக்கிறீர்கள்.

இன்னும் சொல்லப்போனால் நம்முடைய சென்னை மேயர், தாம்பரம் மேயர், கோயம்புத்தூர் மேயர் என்று உயர் பதவியில் இருப்பவர்கள் யார் என்று பார்த்தால் உங்களைப் போன்ற மகளிர்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்லி விடைபெறுகின்றேன். மகளிர் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்று இருப்பதுதான் மகளிர் உரிமைக்கான அடித்தளம் ஆகும். உங்கள் குடும்பத்தில் ஒருவனாக தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிருக்கு ஒரு அன்பு வேண்டுகோள் வைக்கின்றேன்.

மகளிர் முற்போக்காகச் சிந்திக்க வேண்டும். சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். அப்போதுதான் உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் முற்போக்காக, சுதந்திரமாக, சிந்திக்கக் கூடியவர்களாக அமைவார்கள்.

எனவே மகளிர் நிறைய படிக்க வேண்டும். முற்போக்காகச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அப்போதுதான் ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயமும் முன்னேற முடியும். பெண்களும் பொருளாதாரமும் என்பது பற்றிய ஓர் ஆய்வுக் கட்டுரையில் நான் படித்திருக்கின்றேன்.

ஆண்களை விட மகளிர்தான் தங்களுடைய வருமானத்தில் பெருமளவில் தங்ளுடைய குடும்பப் பராமரிப்புக்காகச் செலவிடுவார்கள், சேமிப்பார்கள்.

எனவே, பொருளாதாரத்தில் மகளிர் வளர்வது நமது வீட்டிற்கும், சமுதாயத்திற்கும், ஒட்டுமொத்த நாட்டிற்கும் ஒரு நல்ல பலனைத் தரும்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்று தொடங்கி வைத்திருக்கின்ற இந்தக் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஒவ்வொரு வீட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் பெரிய தூண்டுதலாக அமையப்போகின்றது. இங்கு வந்திருக்கக்கூடிய பயனாளிகள் உங்கள் ஒவ்வொருவருக்கும் மகளிர் உரிமைக் கையேடு புத்தகம், உங்களிடத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் புத்தகத்தை, நீங்கள் அனைவரும் கண்டிப்பாகப் படிக்க வேண்டும். அந்தப் புத்தகத்தில் நம்முடைய கழக அரசு, `திராவிட மாடல் அரசு' நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கெல்லாம் என்னென்ன திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள், அந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள் எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அந்தக் குறிப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது.


அந்தப் புத்தகத்தை நீங்கள் முழுமையாகப் படித்து இந்த அரசினுடைய திட்டங்கள் அத்தனையையும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்தத் திட்டத்தின் பயனாளிகளாக வந்திருக்கக் கூடிய உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்தையும், அன்பையும் தெரிவித்து விடை பெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

முன்னதாக நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சியின் மேயர் பிரியா வரவேற்புரை ஆற்றினார். சிறப்புத் திட்ட செயலாக்கத்துறையின் செயலாளர் மருத்துவர் தாரேஷ் அகமது நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையரும், கூடுதல் தலைமைச் செயலாளருமான டாக்டர்.இராதாகிருஷ்ணன் மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி துணைத் தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மாமன்ற உறுப்பினர் ஈஸ்வரி வெங்கடேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று (15.09.2023) காஞ்சிபுரத்தில் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, திருவள்ளூரில் நடைபெற்ற விழாவில் கலைஞர் மகளிர் உரிமை திட்ட பயனாளிகளான 2170 மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கிடும் வகையிலான வங்கி பற்று அட்டைகள் மற்றும் கலைஞர் மகளிர் உரிமை கையேடுகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார் இதில். முன்னாள் ஒன்றிய அமைச்சர் டாக்டர்.எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஜெயக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன் ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ. கோவிந்தராஜன் , க.கணபதி, துரை சந்திரசேகர், மாவட்ட திட்டக்குழு தலைவர் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.ராஜ்குமார், ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மாவட்ட ஊராட்சி குழு துணை பெருந்தலைவர் டி.தேசிங்கு, உள்பட அரசு அதிகாரிகள் ஒன்றிய குழு தலைவர்கள் நகர்மன்ற தலைவர்கள் துணைத் தலைவர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.



சென்னை கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளர் பி.கருணா (எ) வருணவேல் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் பகுதிச் செயலாளர்கள் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.விஜயகுமார், மண்டலக்குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு , வட்டச் செயலாளர்கள் ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன், பா.கதிரவன், ஆர்.ரவிசந்திரன், டி.சதிஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.ராஜேஷ் ஜெயின், வெ.பரிமளம் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.



செங்கல்பட்டு மாவட்டம், அலிசன் காசி மேல்நிலைப் பள்ளியில் மகளிர் பயன்பெறும் வகையில், மாதந்தோறும் ரூ.1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தினை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, வரலட்சுமி மதுசூதனன், அரவிந்த் ரமேஷ், எஸ்.எஸ். பாலாஜி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் எஸ்.ஆர்.எல். இதயவர்மன், உதயா கருணாகரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், நகராட்சி நகர்மன்ற தலைவர்கள் தேன்மொழி நரேந்திரன், சண்முகம், சந்தானம், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (15.09.2023) திருவண்ணாமலை மாவட்டம், தச்சம்பட்டில் நடைபெற்ற விழாவில் மகளிர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/– வழங்கிடும் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை தொடங்கி வைத்து, மகளிருக்கு வங்கி பற்று அட்டைகளை (ATM CARD) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணை தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித்தலைவர் பா.முருகேஷ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி (செங்கம்), எஸ்.அம்பேத்குமார் (வந்தவாசி), பெ.சு.தி.சரவணன் (கலசபாக்கம்), ஒ.ஜோதி (செய்யார்). மாநில தடகள சங்க துணை தலைவர் மரு. எ.வ.வே.கம்பன், இயக்குநர், செய்யார் கூட்டுறவு சர்க்கரை ஆலை எம்.எஸ்.தரணிவேந்தன். கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செ.ஆ.ரிஷப், மாவட்ட வருவாய் அலுவலர் மரு. மு.பிரியதர்ஷினி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் திருமதி. பார்வதி சீனிவாசன், திருவண்ணாமலை ஒன்றிய குழு தலைவர் திருமதி. கலைவாணி கலைமணி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்: பெண்களுக்கு கிடைத்துள்ள புதிய கவுரவம்!

# முதல்வரின் சாதனை மகுடத்தில் மற்றுமோர் ஒளிவீசும் வைரக்கல்!

## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, செப். 16-

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் பெண்களுக்கு புதிய கவுரவத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்துள்ளார். இது முதல்வரின் சாதனை மகுடத்தில் பதித்துள்ள மற்றுமோர் ஒளி வீசும் வைரக்கல் என ‘தினத் தந்தி’ நாளேடு தனது 15.9.2023 தேதியிட்ட இதழில் ‘ஒரு கோடி பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய்!’ என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

சமுதாயத்தில் நல்ல பல சீர்திருத்தங்களை செய்த அண்ணாவின் பிறந்த நாளான இன்று, அவர் பிறந்த ஊரான காஞ்சிபுரத்தில், முதல் - அமைச்சர் ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பெண்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கிறார். மறைந்த பேரறிஞர் அண்ணாவுக்கு இன்று 115 வது பிறந்த நாள். சமுதாயத்தில் நல்ல பல சீர்திருத்தங்களை செய்த அண்ணாவின் பிறந்த நாளான இன்று, அவர் பிறந்த ஊரான காஞ்சிபுரத்தில், முதல் - அமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்கள் ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பெண்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கிறார். தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் கூறிய வாக்குறுதிகளையெல்லாம் நிறைவேற்றிக்கொண்டு இருக்கும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்ற வாக்குறுதியை எப்போது நிறை வேற்றுவார்? என்ற எதிர்பார்ப்பு தமிழக மக்களிடையே, குறிப்பாக பெண்கள் மத்தியில் இருந்தது.




அடுத்த பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு இன்னும் 7 மாதங்கள் இருக்கும் நிலையில், இந்த ஆண்டு பட்ஜெட்டில் இந்த திட்டத்துக்காக ரூ.7 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டது. மாதம் ஆயிரம் கோடி என்ற கணக்கில், ஒரு கோடி பெண்களுக்கு கொடுக்க திட்டமிடப் பட்டது. தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படும் சமூகநல திட்டங்களி லேயே ஒரு மாபெரும் முன்னெடுப்பாக அமைந்துள்ள இந்த திட்டத்துக்கு, “கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம்” என்று பெயர் சூட்டப்பட்டது. இந்த திட்டத்தின் பலனை பெறுவதற்கான தகுதி வாய்ந்தவர்கள் யார் யார்? என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளில், தகுதி வாய்ந்த குடும்பங்களில் 21 வயது நிரம்பிய பெண் ஒருவர் விண்ணப்பிக்கலாம், ஒரு ரேஷன் கார்டுக்கு ஒருவர் மட்டுமே விண்ணப்பிக்கலாம், ஆண்டு வருமானம் ரூ.2½ லட்சத்துக்கும் குறைவானவர்களாக இருக்கவேண்டும் என்பது உள்பட பல தகுதிகள் வரையறுக்கப்பட்டு இருந்தன. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் ரேஷன் கடைகள் மூலம் வழங்கப்பட்டன. இந்த திட்டத்துக்காக, ஒரு கோடியே 63 லட்சம் பேர் விண்ணப்பித்து இருந்தனர்.

தகுதி வாய்ந்தவர்களை தேர்ந்தெடுப்பதற்காக கம்ப்யூட்டரில் ஒரு மென்பொருள், அதாவது சாப்ட்வேர் உருவாக்கப்பட்டு தேர்வு நடந்தது. இதன் மூலம் ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 3 லட்சம் அரசு ஊழியர் குடும்ப பெண்கள் உள்பட 56½ லட்சம் பெண்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு ள்ளன. எதற்காக நிராகரிக்கப்பட்டன? என்ற விவரம் அவர்கள் செல்போனுக்கு குறுஞ்செய்தி யாக அனுப்பப்படும் என்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டா லின் தெரிவித்துள்ளார். மேல்முறையீடு செய்யவும் அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்தில் முதல்- அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த திட்டத்தை தொடங்கிவைக்கும் அதே நேரத்தில், மாவட்ட தலைநகரங்களில் அமைச்சர்கள் தொடங்கி வைக்கிறார்கள். அந்த இடத்துக்கு பணம் கிடைக்காத யாராவது வந்து விளக்கம் கேட்டால் பதில் சொல்லவும், கோரிக்கை மனு கொடுத்தால் பரிசீலிக்கவும் முதல்-அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இந்த ஏற்பாடு மிகவும் வரவேற்கத்தக்கது. ஏற்கனவே, பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் ரூ.1 வரவு வைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்ட நிலையில், நேற்றே பலருக்கு ரூ.1,000 போய் சேர்ந்துவிட்டது. வசதி குறைந்த குடும்ப பெண்களுக்கு மாதம் ரூ.1,000 என்பது அவர்களுக்கு தன்னம்பிக்கையை அளிக்கும். “சொன்னதை செய்வோம், செய்வதையே சொல்வோம்” என்று கலைஞர் அடிக்கடி சொன்னதை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மாபெரும் சமூகநல திட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் சாதனை படைத்து விட்டார், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின். “இது உதவித்தொகை அல்ல, உரிமைத்தொகை” என்று அறிவித்திருப்பதன் மூலம், இந்த தொகையை பெறும் பெண்களுக்கு புதிய கவுரவத்தை கொடுத்திருக்கிறார், முதல் - அமைச்சர். அவரது சாதனை மகுடத்தில் இது ஓர் ஒளிவீசும் வைரக்கல்லாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மாதவரத்தில் கலைஞரின் மகளிர் உரிமை திட்டம்!

# தமிழ்நாடு முதலமைச்சரை வாழ்த்தி துண்டுப் பிரசுரம் - கோலம் - இனிப்பு - ஆட்டோ பிரச்சாரம்!

## புழல் எம்.நாராயணன் தலைமையில் கழகத்தினர் கொண்டாடினர்!

சென்னை, செப். 16 -

இந்தியாவே வியந்து போற்றுகின்ற திட்டமாக விளங்குகின்ற கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ஆயிரம் ரூபாய் வழங்கும் நிகழ்ச்சியை நேற்று தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காஞ்சிபுரத்தில் துவக்கி வைத்தார்.

மேற்படி திட்டம் துவக்க நாளான நேற்று பகுதி கழகங்கள் ஒன்றிய கழகங்கள் பேரூர் கழகங்கள் அனைத்தும் தங்கள் பகுதிகளில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் விழாவை கொண்டாடும் வகையில் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்குதல் அங்கீகரிக்கப்பட்ட இடங்களில் போஸ்டர் ஒட்டுதல் வீட்டு முன் வண்ண கோலமிடுதல் பொதுமக்களுக்கு கழக அரசின் சாதனைகளை கொண்டு பிரசுரங்களாக விநியோகித்தல் பொதுவான பொதுமக்கள் நடமாடக்கூடிய இடத்தில் ஆட்டோ பிரச்சாரம் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும் என்று கழக பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் அறிவித்ததன் பேரில், சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் 17 வது வட்டத்தில் வடபெரும்பாக்கம் சின்ன தோப்பு பகுதியில் அடங்கிய பேரறிஞர் பெருந்தகை அறிவுலக மேதை அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் கழகத்தினர் மலர்மாலை அணிவித்தனர்.

17 வது வட்டச் செயலாளர் கே கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் 500 பேருக்கு இனிப்புடன் கூடிய காலை உணவு வழங்கப்பட்டது.

கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை போற்றும் வகையில் முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் வார்டு முழுவதும் போஸ்டர்கள் ஒட்டப்பட்டன.

தீயம்பாக்கம், பெரியார் நகர், காந்திநகர், கொசப்பூர், வடபெரும்பாக்கம், அரியலூர் ஆகிய பகுதிகளில் பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

சின்ன தோப்பு பேரறிஞர் அண்ணா சிலை அருகே ஆட்டோவில் ஒலிபெருக்கி மூலம் கழக அரசின் சாதனைகளை விளக்கி புழல் எம். நாராயணன் பேசினார்.

மேலும் வார்டு பகுதிகளில் அனைவரின் இல்லங்களிலும் முதலமைச்சருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் வண்ணக் கோலங்களிட்டு பெண்கள் முதலமைச்சருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சிக்கு வட்டக் கழக துணை செயலாளர் எஸ்.பாலாஜி, சி.மூர்த்தி மற்றும் மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.என்.அஜய் தென்னவன் வரவேற்றனர்.

மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் சி.அருணாசலம், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணியின் துணை அமைப்பாளர் எஸ்.சிவக்குமார், மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.உதயகுமார், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கோபால கிருஷ்ணன், பத்மநாபன், ஏசுராஜ், சம்பத், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர்கள் அரியலூர் வினோத், ராஜ்குமார், முன்னாள் பகுதி பிரதிநிதி என்.நாகராஜன், ஜி.முனிவேல், ஜி.செல்வம், தீயம்பாக்கம் சுதர்சன்,

வடபெரும்பாக்கம் டாக்டர் மைக்கேல், பி.செந்தில், எம்.கோவிந்தன், இ.கார்த்திக், எம்.ஏழுமலை, முத்து, எஸ்.சசிகுமார், வக்கீல் எம். என்.தளபதி, கொசப்பூர் எம். விஜயன், முத்தையன், பெரியார் நகர் பாஸ்கர், தீயம்பாக்கம் ஜான்சன், வில்சன், பூபாலன், மணலி புதுநகர் டோமினிக், செமின் எடிசன், மாத்தூர் 19 வது வட்டம் ராஜேஷ், கண்ணன் உள்ளிட்ட திரளான திமுகவினர் கலந்து கொண்டார்.



சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி 92 வது வட்ட செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமையில் எம்.ஏ.செந்தில் சுரேஷ் கே.குமரேசன் எம்.சி.எழிலரசு ஆகியோர் முன்னிலையில் அறிஞர் அண்ணாவின் சிலைக்கு மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினர் காரம் பாக்கம் க.கணபதி, மதுரவாயல் வடக்கு பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் மாலை அணிவித்தனர். இந் நிகழ்ச்சியில் வட்டச் செயலாளர்கள் எஸ்.ஜி.மாதவன், ப.ஆலன் எம்.கே.பி.அண்ணாதாசன், சி.சசிகுமார், எம்.இ. ஸ்டாலின், எம்.ரூபன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## டெல்லி அதிகாரக்கோட்டை நெற்றிக் கண்ணைக் காட்டினாலும்,

# குற்றம் குற்றமே என்றுரைத்த திராவிட இயக்க நக்கீரன்தான் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்!

திராவிட இயக்கச் சிந்தனைகளுக்கும், கோட்பாடுகளுக்கும் வேர்களாகவும், விழுதுகளாகவும் இருப்பவை, தொன்மையான தமிழ் மரபுகளும், சிந்தனைகளும், இலக்கியங்களும், வாழ்வியல் முறைகளுமாகும். எனவே, இன்றைய திராவிட இயக்கக் கோட்பாடுகளுக்கான அடித்தளம், தமிழனது கலை, கலாச்சாரம், நாகரிகம், பண்பாடு ஆகிய வாழ்வியல் கூறுகள்தான் அடித்தளமாகின்றன.

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த தமிழ்ச் சமுதாயம், நிலங்களை ஐந்து வகையாகப் பிரித்து குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், பாலை எனப் பெயரிட்டு அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வியல் முறைகளுக்கெல்லாம் இலக்கியங்களின் மூலமாக வடிவங்கொடுத்தனர். இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறைதான் ஆதித்தமிழர்தம் வாழ்வியல் முறை. இதன் காலமாற்றங்களின் பரிணாமம்தான் திராவிடம் – திராவிடர்கள். திராவிடர்கள் இந்திய நிலப்பரப்பு முழுமையும் பரந்துபட்டு வாழ்ந்தார்கள் என்பதற்கான எச்சங்கள்தான் மொகஞ்சதாரோ – ஹரப்பா – கீழடி அகழ்வாராய்ச்சிகளில் கிடைத்த தரவுகளும், தொல்லியல் சான்றுப் பொருட்களுமாகும்.

இத்தகைய தொன்மையான நாகரிகச் சிறப்புடன் வாழ்ந்த திராவிடச் சமூகத்தில் இடையிலே புகுந்துவிட்ட ஆரிய இனத்தவர்களால் உருவாக்கப்பட்ட ரிக், யஜுர், சாம, அதர்வண ஆகிய நான்கு வேதங்களும், மனுதர்ம சாஸ்திரங்களும் மனுஸ்மிருதிகளும் “சனாதனக்கோட்பாட்டை” புகுத்தி ஒன்றுபட்டு வாழ்ந்த சமூகத்தை, பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என நான்கு வர்ணப் பிரிவுகளாக்கி பிராமணன் தலையிலும், சத்திரியன் புஜத்திலும், வைசியன் தொடையிலும், சூத்திரன் பாதத்திலும் பிறந்தவர்கள் என்று பிரித்தார்கள். இந்தப் பிரிவினைக்கு அப்பாற்பட்டவர்கள் “பஞ்சமர்கள்” என்று கருதப்பட்டார்கள்.

இந்த நால்வகை வர்ணாசிரமப் பிரிவில் எல்லா வகையிலும் உயர்ந்தவனாக பிராமணன் சருதப்பட்டான். சூத்திரன் பிராமணனுக்கு பணிவிடைகள் செய்திடும் நிரந்தர அடிமையாக்கப்பட்டான். அதுமட்டுமல்ல, கல்வி சூத்திரனுக்கு மறுக்கப்பட்டது. சூத்திரனது நிலை இதுவெனில், பஞ்சமர்களின் பரிதாபமான நிலைகளை விவரிக்க வியலாது! இந்தக் கொடுமைகள் பலநூறு ஆண்டுகாலமாக தொடர்ந்தது. ஆரியர்கள் வேதங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய அடிப்படைக் கோட்பாடுதான் “சனாதனக் கோட்பாடாகும்”. இதன் விளக்கம் என்பது குல தர்மக் கோட்பாடாகும். நோக்கம் என்பது வர்ணதர்மத்தை நிரந்தரமாக கட்டிக்காப்பது, விளைவு என்பது சூத்திரர்களுக்கும், பஞ்சமர்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டு, நிரந்தர அடிமைகளாக பிராமணர்களுக்கு பரம்பரையாக பணியாற்றுவது. பெண்களை உரிமைகள் ஏதுமற்ற போகப் பொருளாக்குவது. கடவுளின் தூதுவன் பிராமணன்தான் என சத்திரியனையும், வைசியனையும், சூத்திரனையும், பஞ்சமர்களையும் நம்பவைப்பது.

பொன். முத்துராமலிங்கம்
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்



இந்த ஆண்டான் அடிமை முறைக்கும், பெண்ணடிமை முறைக்கும் ஆரியர்கள் இட்டபெயர் “சனாதன தர்மம்”. இதற்கென்ன விளக்கம் என்று வினவினால், “ஆதியும் – அந்தமும் இல்லாதது” என்கிறார்கள். இப்படி “மிதி”கொம்பும் இல்லாமல் “பிடி”கொம்பும் இல்லாமல் அனாமதேயக் கோட்பாடு எங்களுக்குத் தேவையில்லை, அதிலும் குறிப்பாக ஏற்றத்தாழ்வற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கி முச்சங்கங்கள் வைத்து தமிழ் வளர்த்து, இயற்கையோடு ஒன்றிவாழ்ந்து, முழுமையான பெண்ணுரிமைகளை வழங்கி, வாழ்வாங்கு வாழ்ந்து உலக சமுதாயத்திற்கு வழிகாட்டும் “திருக்குறள்” என்ற வாழ்வியல் இலக்கியம் படைத்த தமிழ் இனத்தைச் சிதைத்துச் சின்னா பின்னமாக்கிய ‘சனாதனக் கோட்பாடு’ எனும் வர்ணாசிரமக் கோட்பாட்டை அழிப்பதுதான் எதிர்வரும் காலத்தில் புதிய விடியலை உருவாக்கும்.

எனவே, சனாதனத்தை எதிர்ப்பது என்பதைவிட அழிப்பது அல்லது ஒழிப்பதுதான் சரியான வழிமுறையாக இருக்கமுடியும். இன்னும் தீர்க்கமாகவும், தெளிவாக வும் தெரிவிக்கவேண்டுமாயின் சனாதனக் கோட்பாட்டை அப்புறப்படுத்துவது (Wipeout) கூட எதிர்வரும் காலத்தில் சமூக ஒற்றுமையைச் சீர்குலைக்கும். எனவே, அந்தக் கோட்பாட்டை வேரோடு அப்புறப்படுத்த வேண்டும் (Root out) என்பதே தீர்க்கமான நடவடிக்கையாக இருக்கமுடியும். இந்த நடவடிக்கையை முற்போக்குச் சிந்தனையுள்ள எந்த பிராமணரும், பிராமணப் பெண்களும் மறுக்கமாட்டார்கள் என உறுதியாக நம்பலாம். இந்தத் தெளிவானதும், தீர்க்கமானதுமான கருத்தைத்தான் தமிழ்நாடு விளையாட்டுத்துறை அமைச்சர், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் தெரிவித்திருக்கிறார். இந்தக்கருத்து தொடர்ந்து திராவிட இயக்கம் நாட்டுமக்களுக்கு தெளிவுபடுத்திக் கொண்டிருக்கக்கூடிய கோட்பாடுதான். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக்கழகம் என்று திராவிட இயக்கங்கள் தொடர்ந்து மக்கள் மத்தியில் வலியுறுத்திக்கொண்டிருக்கும் சனாதன ஒழிப்பு நிலைப்பாட்டை மக்கள் எளிதில் விளங்கிக்கொள்ளக்கூடிய எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளார்.

அமைச்சர் உதயநிதியின் இந்தக் கருத்தும், நிலைப்பாடும் இந்துக்கள் எனக்கருதப்படுபவர்களுக்கு எதிரானது அல்ல. மேலும் இந்துக்களை ஒழித்துவிடவேண்டும் என்றும் அவர் தெரிவிக்கவில்லை. திராவிட இயக்கச் சிந்தனைகளுக்கும், சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கும் ஓர் நச்சுச்சிந்தனையின் வெளிப்பாடான சனாதனக்கோட்பாட்டை ஒழிப்பதுதான் திராவிடஇயக்கங்களின் இலக்காகவும் இருக்கமுடியும். அதுமட்டுமல்ல, சனாதனக் கோட்பாட்டால் மிகக்குறைந்த சதவிகிதத்தினர் எண்ணிக்கையிலுள்ள வர்கள்கல்வி - செல்வம், வேலைவாய்ப்பு என அனைத்து பயன்களையும் பெற்று ஏகபோக வாழ்க்கை வாழ்ந்தனர். மக்கள் தொகையில் 90 சதவிகிதத்திற்கும் மேலான மக்கள் கல்விக்கு உரிமையின்றி, அடிமைகளாக பிராமணர்களுக்கு குற்றேவல் செய்பவர்களாக வாழ்ந்து வறுமையிலேயே மடிந்திருக்கிறார்கள். இது தான் பலநூற்றாண்டு காலமாக பிராமணர்கள் தவிர்த்து மற்றைய சனாதனப் பிரிவினர் பட்ட எண்ணிலடங்காத் துன்பங்களும், துயரங்களும் ஆகும்.

இந்தக் கொடுமைகளுக்கு அடித்தளமாகவும், விதையாகவும் கருதப்படுகின்ற சனாதன முறையை சனாதன தர்மம் என்றோ, அல்லது வாழ்வியல்முறை என்றோ எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? இயற்கைச் சீற்றங்களாவது வந்து அழிவுகளை உண்டாக்கிவிட்டு மறைந்துவிடும், ஆனால் இந்த வேத அடிப்படையிலான சனாதன தர்மம் உண்டாக்கியிருக்கின்ற பலநூறு ஆண்டுகாலமாக மனிதகுலத்தில் உருவாக்கியிருக்கின்ற பேரழிவுகள் எண்ணிலடங்காதவை களாகும். அமைச்சர் தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்த கருத்துகள் திராவிட இனத்தைப் பாதுகாப்பதற்காக மட்டுமல்ல; மனித குல சமத்துவத்தையும், சமூகநீதியையும், பொருளியல் சமத்துவத்தையும், பெண்ணுரிமையை உறுதிப்படுத்துவதற்காகவும்தான் என்பதை, நாட்டில் உள்ள அனைத்து மக்களும் ஏன்? எல்லா மதத்தைச் சார்ந்தவர்களும், குறிப்பாக இந்து மதத்தைச் சார்ந்தவர்களும், அமைச்சர் உதயநிதியின் சனாதன ஒழிப்பு நிலைப்பாட்டின் நியாயங்களையும், கடந்தகாலத்தில் சனாதன தர்மத்தால் விலங்கினங்களைவிட பெரும்பான்மையான மக்கள் அனுபவித்த துன்ப, துயரங்களையும் நடுநிலையோடு எண்ணிப்பார்த்து தெளிவுபெறவேண்டும், திருத்திக் கொள்ளவேண்டும் என்பதே அமைச்சர் உதயநிதியின் நோக்கமும், எதிர்பார்ப்புமாகும்.

இந்தக் கருத்தை அமைச்சர் உதயநிதி கூறியவுடன் அதனைத் திருத்தி இந்துக்களுக்கு எதிராகக் கருத்தை வெளிப்படுத்தியதைப்போல ஓர் மாயத்தோற்றத்தை உருவாக்குவதும், வாரணவசியில் ஓர் “சாமியார்” கையில் பட்டாக்கத்தியுடனும், அமைச்சர் உதயநிதியின் படத்துடன் பேட்டி தருகிறார். அந்தச் சாமியார் உதயநிதியின் தலைக்கு 10 கோடி விலை பேசுகிறார். இப்படி பகிரங்கமாகப் பேட்டி கொடுத்த அந்தச் சாமியார் மீது கிரிமினல் நடவடிக்கையல்லவா சட்டப்படி மேற்கொண்டிருக்கவேண்டும்? அந்த மாநில அரசாங்கம் அந்தக் கடமையை நிறைவேற்றியிருக்கிறதா?

அதுமட்டுமல்ல, ஒன்றியத்தின் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், அமைச்சர் உதயநிதியின் கருத்துக்கு பதில் கூறவேண்டும் என்று ஆணையிட்டுள்ளாரே வாரணாசி சந்நியாசி ஆயுதத்தோடும், அமைச்சர் உதயநிதியின் படத்தோடும், வலம்வந்து உதயநிதியின் தலைக்குப் பத்துக்கோடி விலை பேசுகிறாரே, இதற்கென்ன நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதமரின் நடவடிக்கை அமைச்சரின் நடவடிக்கை அமைச்சர் உதயநிதியின் கருத்துக்கு எச்சரிக்கை விடுப்பதைப்போல் அல்லவா இருக்கிறது.

அமைச்சர் உதயநிதி ஒருதலைப் பட்சமான சனாதனக் கோட்பாட்டைத்தான் ஒழிக்கச் சொன்னார். இந்துக்களையோ மற்றவர்களையோ அழிக்கச் சொல்லவில்லை. இதை பிரதமர் உரியமுறையில் புரிந்து கொள்ளாமல், அதிகார “நெற்றிக்கண்ணை” அமைச்சர் உதயநிதியை நோக்கித் திருப்புகிறார். தமிழ்மண், அதிகாரத்திற்கு அஞ்சாத நக்கீரனை உருவாக்கிய மண் அல்லவா. ஆம், நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்று அன்று ஆண்டவனுக்கு எதிராக அஞ்சாமல் நக்கீரன் உண்மையை உறுதிபட எடுத்துச்சொன்னார். ஆம், இந்தத் தமிழ் மண்ணின் நக்கீரன் வழித்தோன்றலாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் டெல்லியிலிருந்து அதிகாரக் கோட்டை நெற்றிக்கண்ணை காட்டிய போதும் சனாதனதர்மம் மனித குலத்திற்கு எதிரான குற்றம் – குற்றமேதான் என தொடர்ந்து வலியுறுத்திவரும் அமைச்சர், தம்பி உதயநிதி ஸ்டாலினை திராவிட இயக்கத்தின் நக்கீரனாகவே மக்கள் ஆச்சரியத்துடனும், ஆர்வத்துடனும் பார்க்கிறார்கள்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தை நிறைவேற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக 17 வது வட்டம், வடபெரும்பாக்கத்தில் பொதுமக்களுக்கு இனிப்பு, காலை உணவு, மற்றும் கழக அரசின் சாதனைகள் விளக்கி துண்டு பிரசுரங்கள், போஸ்டர்கள், வண்ணக்கோலம் இடுதல், மற்றும் ஆட்டோ பிரச்சாரம் ஆகியவற்றை மேற்கொண்டு தங்களது வாழ்த்துக்களை முதல்வருக்கு தெரிவித்துக் கொண்டனர். 17 வது வட்ட செயலாளர் கே.கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் எஸ்.பாலாஜி, சி.மூர்த்தி, கே.சண்முகப்ரியன், சி.அருணாசலம், எஸ்.சிவகுமார், எஸ்.கோபால கிருஷ்ணன், எஸ்.உதயகுமார், என்.நாகராஜன், ஜி.முனிவேல், இ.சுதர்சன், எம்.என்.அஜய் தென்னவன், ஜான்சன், பூபாலன், வி.சிவப்பிரகாஷ், எம்.மைக்கேல், செந்தில், கோவிந்தன், கார்த்திக், எம்.என்.தளபதி, ராஜேஷ், கண்ணன், டோமினிக் செமீன், எடிசன், இயேசுராஜ், பக்தவச்சலம், சம்பத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

## தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா
## தி.மு.க. பவள விழா ஆண்டு
# தி.மு.க. முப்பெரும் விழா-2023



நாள் : 17 – 9 – 2023
ஞாயிறு மாலை 5 மணி

இடம் : பள்ளிகொண்டா,
வேலூர்.

வரவேற்புரை
**ஏ.பி.நந்தகுமார்** எம்.எல்.ஏ.,
செயலாளர் – வேலூர் மாவட்ட தி.மு.க.

தலைமை
பொதுச் செயலாளர் **துரைமுருகன்**

**முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை பரிசு வழங்கும் விழா**
**“கழக விருது” க்காக**
தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில் ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று – பணமுடிப்பு வழங்குதல்

*****

**விருது வழங்கும் விழா**

*விருதுகள் மற்றும் பரிசுகள் வழங்கிச் சிறப்புரை*
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
## தலைவர் மு.க.ஸ்டாலின்

வாழ்த்துரை
பொருளாளர் **டி.ஆர்.பாலு**
முதன்மைச் செயலாளர் **கே.என்.நேரு**
துணைப் பொதுச் செயலாளர்கள்
டாக்டர் **க.பொன்முடி, ஆ.இராசா,**
**கனிமொழி கருணாநிதி,** அந்தியூர் **ப.செல்வராஜ்**

*விருது பெறுவோர்*

**பெரியார் விருது**

க.சத்தியசீலன்

**அண்ணா விருது**

க.சுந்தரம்

**கலைஞர் விருது**

மாண்புமிகு ஐ.பெரியசாமி

**பாவேந்தர் விருது**

திருமதி மலிகா கதிரவன்

**பேராசிரியர் விருது**

ந.இராமசாமி

நன்றியுரை : **ப.கார்த்திகேயன்** எம்.எல்.ஏ.,
செயலாளர் – வேலூர் மாநகர தி.மு.க.

தி.மு.க. தலைமைக் கழகம்

ARASU ARTS

# உடன்பிறப்பே... 23

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த புலவர் கோவிந்தன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# புலவர் கோவிந்தன்

## கழகம் காத்த பெரும் புலவர்!



ஓவியம் : ரவி பேலட்

“தன்மான இயக்கத் தமிழ்ப் புலவர், பாதை மாறா பகுத்தறிவுவாதி, நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களைத் தமிழ் அன்னைக்குக் காணிக்கையாகப் படைத்தவர், இயக்கத்துக்கு வந்த, எந்தச் சோதனையிலும் தலைநிமிர்ந்து நின்ற புலவர் பெருந்தகை” என கலைஞரால் போற்றப்பட்டவர், கழகத்தின் ஆழக்கால் பதிந்து நின்ற பெருந்தூண் புலவர் கோவிந்தன். பேரறிஞர் அண்ணா கண்ட இயக்கம் 1972-ஆம் ஆண்டில் பிளவுபட்டு பெரும் சோதனை கண்டபோது, கலைஞரின் கரங்களை வலுப்படுத்தி நின்ற கொள்கை முழக்கம், புலவர் கோவிந்தன்.

அப்போதைய வட ஆற்காடு மாவட்டம், செய்யாறு பகுதியில் கழகத்தின் கொடியை முதன்முதலாகப் பறக்கவிட்ட கொள்கைக்காரர் கோவிந்தன் அவர்கள்தான். செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, வேலூர், சோளிங்கர், அரக்கோணம், குடியாத்தம் வரை திராவிடர் கழகம் செல்வாக்கு செலுத்திய காலத்தில், புலவர் கோவிந்தன் ஆளுமைமிக்க முன்னணி வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர். பின்னர் கழகம் கண்ட, ‘கண்ணீர் துளிகளில்’ புலவர் கோவிந்தனும் இடம்பிடித்தார்.

### தமிழார்வத்தில் இருந்து அரசியல்!

நெசவுத் தொழிலையும், உழவுத் தொழிலையும் நம்பி வாழ்ந்த குடும்பத்தில் 1915-ஆம் ஆண்டு பிறந்தவர் கோவிந்தன். இவரது தந்தை காங்கேயன், கைத்தறி ஆடைகளை ஊர் ஊராக விற்பனை செய்து வந்தவர். ஆரம்பக் கல்வியையும், உயர்நிலைக் கல்வியையும் செய்யாறில் படித்தவர், 1934-ஆம் ஆண்டு பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றார். இவருக்கு தமிழாசிரியராக இருந்தவர் ஔவை சு.துரைசாமி. ‘உரையாசிரியர்’ எனப் பெயர் பெற்றவர். அவரிடம் கல்வி பயின்றதால், தமிழார்வம் மிக்கவராகத் திகழ்ந்த கோவிந்தன், 1940-ஆம் ஆண்டில் சென்னை பல்கலைக்கழகத்தில் **‘வித்துவான்’** பட்டம் பெற்றார். அப்போதிருந்து அவரது பெயருக்கு முன் புலவர் அடைமொழி சேர்ந்து கொண்டது.

1938-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது தமிழறிஞர்கள் பலரும் களத்தில் இறங்கினர். அவர்களில் செய்யாறில் புலவர் கோவிந்தன் குரல் உரத்து ஒலித்தது. பெரியார், நாவலர், சோமசுந்தர பாரதியார், தமிழ்வேள் உமாமகேசுவரனார் ஆகியோரை அழைத்துச் செய்யாறில் ஒரு மாநாட்டினை நடத்தினார் புலவர் கோவிந்தன். அப்போது முதல் தீவிர அரசியல் அவரை அழைத்துக் கொண்டது.

### பண்பாட்டுத் தளத்தில் பகுத்தறிவுப் பிரச்சாரம்

1941-ஆம் ஆண்டு, வேலூரில் தமிழ் ஆசிரியராகப் பணிக்குச் சேர்ந்தார். அப்போது அவரிடம் பயின்ற மாணவிகளில் ஒருவர் அன்னை மணியம்மையார். பேரறிஞர் அண்ணாவுடன் கிடைத்த தொடர்பில், அவரது அரசியல் ஆர்வம் தீவிரமடைந்ததால் ஆசிரியர் பணியைப் புலவர் தொடரவில்லை. அண்ணாவின் **‘சந்திரோதயம்’** நாடகம், புரட்சிக் கவிஞரின் **‘இரண்யன் அல்லது இணையற்ற வீரன்’** ஆகிய நாடகங்களை செய்யாறு பகுதியில் நடத்தி பகுத்தறிவுப் பிரச்சாரத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

1948-ஆம் ஆண்டு, செய்யாறு பகுதியில் புலவர் முன்னின்று நடத்திய பொங்கல் விழா பெரிய அளவில் பேசப்பட்டது. ஏழு நாட்கள் கொண்டாடப்பட்ட அந்த விழாவில், திராவிட இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் கலந்துகொண்டு மக்களிடையே பண்பாட்டு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். தனது தம்பி நடராசன் அவர்களுக்கு தந்தை பெரியார் தலைமையில் சுயமரியாதைத் திருமணத்தை நடத்தி வைத்து, அப்பகுதி மக்களுக்குப் புதிய திருமண முறையை அறிமுகப்படுத்தி வைத்தார். இப்படி, பகுத்தறிவு, சுயமரியாதை, பண்பாட்டுத் தளங்களில் வீச்சாகச் செயல்பட்டு வந்த அவர், கழகம் உருவானபோது, அதன் தளகர்த்தர்களில் ஒருவராக அண்ணாவின் பக்கம் நின்றார்.

### தடைக்கு எதிராக வாசிப்பு

கழகத்தின் சார்பில், முதன்முதலில் அமைக்கப்பட்ட 30 பேர் கொண்ட பிரச்சாரக் குழுவில் புலவர் இடம்பெற்றார். கழக முன்னோடிகளிடம் அப்போது மிகப்பெரிய பழக்கமாக இருந்த பத்திரிகை நடத்துவது என்கிற பழக்கம் புலவரிடமும் இருந்தது. அவர் நடத்திய **‘போராட்டம்’** என்கிற வார இதழை அண்ணா தொடங்கி வைத்தார். அந்த இதழ் மூலம் புலவர், அரசியல், இலக்கியக் கட்டுரைகள் படைத்து அறிவுலகத்துக்குப் பங்களிப்புச் செய்தார்.

கழகத்தினர் எழுதிய நூல்களுக்குத் தடை விதிக்கப்பட்டபோது, புலவர் நடத்திய போராட்ட முறை வித்தியாசமானது. அந்த நூல்களுடன் வீதிக்கு வந்து மக்கள் மத்தியில் அவற்றை வாசித்துக் காட்டுவது என்கிற போராட்டத்தைச் செய்தார். **‘ஆரிய மாயை’** போன்ற நூல்கள் செய்யாறு வீதிகளில் படிக்கப்பட்டன. இப்படியான உறுதிமிக்கப் போராட்டங்களால் செய்யாறு மட்டுமல்ல, வட-தென் ஆற்காடு மாவட்டங்கள் முழுவதுமே கழகத்தினரின் போராட்டக் களமாக இருந்தன.

அந்தச் சூழ்நிலையில், 1952-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் கழகத்தின் ஆதரவு பெற்ற வேட்பாளர்களுக்கு கழகத்தினர் வேலை செய்தனர். செங்கல்பட்டுத் தொகுதியில் போட்டியிட்ட டாக்டர் ஏ.கிருஷ்ணசாமி அவர்களின் வெற்றிக்கு புலவரின் பங்கு கணிசமாக இருந்தது.

### அவைத்தலைவர் அரியணையில் புலமை

1957-ஆம் ஆண்டு, கழகம் முதன்முதலில் தேர்தலில் நின்றபோது , செய்யாறு தொகுதிக்கு புலவர் அவர்களை அறிவித்தார் அண்ணா. ஆனால், போட்டியிட விரும்பவில்லை என புலவர் மறுத்ததால் மாற்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், 1962-ஆம் ஆண்டு தேர்தலில், அவர் போட்டியிட்டே ஆகவேண்டும் என்கிற அண்ணாவின் கட்டாயம், அவரை வெற்றி பெற வைத்தது.

1962-67 ஆண்டுகளின் சட்டமன்றத்தில் கழகத்தின் 50 உறுப்பினர்களும் நிகழ்த்திய வாதங்களும், விவாதங்களும் மக்கள் மன்றத்தின் கேள்விகளாக இருந்தன. அப்போது அதிக வினாக்கள் எழுப்பிய உறுப்பினர் என்கிற பெருமையைப் பெற்றவர் புலவர். செய்யாறு தொகுதியில் இருந்து தொடர்ந்து 1967, 1971, 1977 ஆண்டுகளில் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வாகி, அப்பகுதி, கழகத்தின் கோட்டை என நிரூபித்தார்.

1967-இல் கழகம் ஆட்சி அமைத்தபோது, சட்டமன்றத்தை வழிநடத்த சட்டமன்ற துணைத் தலைவராகப் பொறுப்பேற்றார். “அவை எப்படி நடத்தப்பட வேண்டும் என இரண்டாயிரம் ஆண்டு பெருமை கொண்ட தமிழரின் வரலாற்றை அறிந்தவர், இந்தச் சட்டமன்றத்தின் துணைத் தலைவராக அமைவது நமக்கெல்லாம் நல்வாய்ப்பு” என அப்போது அண்ணா குறிப்பிட்டார். பின்னர், 1969-71 ஆண்டுகளில் அவையை நடத்தும் முதன்மைப் பொறுப்பை ஏற்றார் புலவர். “மன்னர்களால் புகழப்பட்ட புலமை, தமிழ்நாட்டின் அரியணையில் ஏற்றப்பட்டுப் புகழப்படுகிறது” எனப் புலவர் சட்டமன்றத் தலைவராகப் பொறுப்பேற்றபோது கலைஞர் புகழாரம் செய்தார்.



1973-ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் கழகத்துக்கு நெருக்கடி வந்தபோது, கலைஞருக்கு நெருக்கமாக நின்றதுடன், அப்போதும் சட்டமன்றத் தலைவராகப் பொறுப்பேற்று வழிநடத்தினார்.

### சட்டப் போராட்டத்தில் முத்திரை

1977-ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் இவர் நிகழ்த்திய வாதங்களால் எரிச்சல் அடைந்த அப்போதைய முதல்வர் புலவரைக் கைது செய்ய உத்தரவிட்டார். மூத்த உறுப்பினர், தோளோடு தோள் பழகியவர் என்றும் பார்க்கவில்லை. நான்கு ஆண்டுகள் நடந்த அந்த வழக்கில் இருந்து எந்த நிபந்தனையுமின்றி விடுதலை ஆனார் புலவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், சட்ட நகல் எரிப்புப் போராட்டம், கறுப்புக் கொடி போராட்டம் என கழகத்தின் அனைத்துக் களப்போர்களின்போதும் கைதாகி சிறை சென்றவர் புலவர். அதே காலகட்டத்தில் எழுத்திலும் முத்திரை பதித்தவராக 71 நூல்களைப் படைத்தார்.

கிளைக் கழகத்தில் இருந்து, தலைமைக் கழகப் பொறுப்பாளர் வரை வளர்ந்த புலவர் அவர்களின் பொதுவாழ்வு, அவரது 75-ஆம் வயதில் 1991-ஆம் ஆண்டு நிறைவடைந்தது. “அவரது படிப்பறிவு, பட்டறிவு, பண்பட்ட இயக்கத் தொண்டுக்கு என்றும் முடிவில்லை” என அப்போது எழுதினார் கலைஞர். கழகத்தின் காலம் வரை புலவர் பெயர் நிலைக்கும்.

**“அவரது படிப்பறிவு, பட்டறிவு, பண்பட்ட இயக்கத் தொண்டுக்கு என்றும் முடிவில்லை” என அப்போது எழுதினார் கலைஞர். கழகத்தின் காலம் வரை புலவர் பெயர் நிலைக்கும்.**

...துடிக்கும்

## EWS இடஒதுக்கீடு சரியா ? தவறா ?




உயர் சாதி ஏழைகளுக்கு 10 சதவிகித EWS (Economically Weaker Section) இடஒதுக்கீடு சரியா? தவறா? என்பது குறித்து விரிவான தொகுப்பினை வெளியிடும் நிகர்மொழி பதிப்பகம், அதற்கான முன்வெளியீட்டினை அறிவித்துள்ளது.

முன்னாள் நீதிபதிகள், சட்ட வல்லுநர்கள், அரசியல் தலைவர்கள், சமூகச் செயல்பாட்டாளர்களின் கருத்துகள், நாடாளுமன்ற விவாதங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள், அரசுத் தரவுகள் என EWS இடஒதுக்கீடு பற்றிய முழுமையான தொகுப்பாக இந்த நூல் வெளிவர உள்ளது. இந்த நூலுக்கு நமது முதலமைச்சர் சிறப்பான அணிந்துரை அளித்திருக்கிறார்.

பெரிய பக்க அளவில் (Double Crown Size), 608 பக்கங்களில் மொத்தம் 105 கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன. 80 சதவிகித கட்டுரைகள் ஆங்கிலத்தில் இருந்தும் இந்தியில் இருந்தும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. நூலின் தொகுப்பாசிரியர் சு. விஜயபாஸ்கர்.

இம்மாத இறுதியில் அனுப்பி வைக்கப்பட உள்ள ரூ.600 விலையுள்ள இந்த நூல், முன் வெளியீட்டில் ரூ.350க்கு கிடைக்கும். மேலதிக விவரங்களை 8428 455 455 என்கிற எண்ணில் வாட்ஸ்அப் அல்லது குறுஞ்செய்தி மூலம் அறிந்துகொள்ளலாம். பொருளாதார அடிப்படையில் இடஒதுக்கீடு சரியா என்பதை அறிந்தால் சமூக நீதி வரலாற்றில் ஆழக் கால் பதிக்கலாம்.

## :.ப்ளாஷ்பேக்



### தளபதியும் தொண்டனும்!

**1991**-ஆம் ஆண்டு விழுப்புரம் மாவட்டத்துக்கு, திருமண நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக அன்றைய இளைஞர் அணி செயலாளரும் இன்றைய முதலமைச்சருமான தலைவர் தளபதி அவர்கள் பங்கேற்றார்கள். திருமணத்தை முடித்துக் கொண்டு 30-வது கிளையில் கழகக் கொடியேற்றும் நிகழ்வும் நடைபெற்றது. அப்போது 5 வயதே நிரம்பி இருந்த என் மகன் கார்த்திகேயன் தளபதிக்குச் சால்வை அணிவிக்க வேண்டும் என்றார். தளபதி அவர்களும் சிரித்துக் கொண்டே அதனை ஏற்றுக் கொண்டார். இன்றைக்குத் தளபதி அவர்கள் முதலமைச்சராகவும் என் மகன், கார்த்திகேயன் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகவும் இருப்பதை, ஒரு தொண்டனாகவும் தந்தையாகவும் எண்ணி மகிழ்கிறேன்.



குப்புசாமி

**-இரா.குப்புசாமி, கிளைச் செயலாளர், திருக்கோவிலூர், விழுப்புரம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கைம்பெண் மறுமணம் ஊக்குவிப்பு!

**1975-ஆம் ஆண்டு, கலைஞரின் 52-வது பிறந்த நாளின்போது கைம்பெண்களுக்கான திட்டங்களைத் தொடங்கி வைத்தார். கைம்பெண் மறுமணத்தை ஊக்கப்படுத்தும் வகையில், 30 வயதுக்குக் குறைந்த கைம்பெண்ணை மறுமணம் புரிந்துகொண்டால், பத்தாயிரம் ரூபாய் அரசு சார்பில் வழங்கும் திட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. நாற்பத்தி ஐந்து வயதான கைம்பெண்களுக்கு முதியோர் உதவித்தொகை அளிக்கவும் வழிவகுக்கப்பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 242




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131


கடமை
கண்ணியம்
கட்டுப்பாடு
ARASU ARTS
தொண்டருக்கு
தொண்டு செய்யும் விழா
முப்பெரும் விழா
நாள் : 17.9.2023, மாலை 5.00 மணி – இடம் : பள்ளிகொண்டா, வேலூர்.
கொடி உயர்த்தி
கொள்கை முழக்கமிட வருகை தரும்
கழகத் தலைவர்
அவர்களே வருக! வருக!!
அன்புடன் : ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ.
செயலாளர்
வேலூர் மாவட்ட தி.மு.க.



வாழ்நாளெல்லாம்
ஓயாமல் உழைக்கும்
குடும்பத்தலைவிகளின்
உழைப்பிற்கு அங்கீகாரமாக...
கலைஞர் மகளிர் உரிமை
திட்டத்தின் மூலம்
மாதம் தோறும்
ரூ.1000
வழங்கிய
மாண்புமிகு
முதலமைச்சர்
அவர்களை
வணங்குகிறோம்...
வாழ்த்துகிறோம்...
சு.கல்யாணசுந்தரம் MP.,
தஞ்சை வடக்கு மாவட்ட செயலாளர் / மாநிலங்களவை உறுப்பினர்
செ.இராமலிங்கம் B.A., MP.,
மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் / ஒன்றிய கழக செயலாளர் திருவிடைமருதூர் (வ)
க.அன்பழகன் MLA
தலைமை செயற்குழு உறுப்பினர்
நன்றி மறவா ....
முனைவர் கோவி.செழியன் M.A.,.BL., Ph.D., MLA
தமிழ்நாடு அரசு தலைமை கொறடா - மாநில வர்த்தக அணி துணை தலைவர்
திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி - தஞ்சை வடக்கு மாவட்டம்




நல்லிணக்க நாயகர்!
நம்மினத்தின் செஞ்சுடர்!!
கலைஞர் 100 - 35
நாள் : 16.09.2023 சனிக்கிழமை மாலை 6.00 மணி
இடம் : யாதவா தெரு, பாடி, சென்னை - 600 050.
தலைமை
டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி
அம்பத்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர்
முன்னிலை
திரு. டி.ஆர்.பாலு எம்.பி
கழகப் பொருளாளர் - கழக நாடாளுமன்ற குழுத் தலைவர்
திரு. பி.கே.சேகர்பாபு
சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்
அமைச்சர் - இந்து சமய அறநிலையத்துறை
ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ
பி.கே.மூர்த்தி எம்.சி எம்.டி.ஆர்.நாகராஜ்
எல்.பி.எப்.மோகன் டாக்டர்.பூர்ணிமா எம்.சி
டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி
வி.ரமேஷ்(எ)நீலகண்டன் எம்.சி
ஜெ.பாலமுருகன் ஜி.வி.நாகவள்ளி எம்.சி
கு.கிருஷ்ணமூர்த்தி து.ஆயிரம்
போற்றுவோர்
திரு. டி.ராஜேந்தர்
நடிகர் - இயக்குநர்
திரு. பாரதி கிருஷ்ணகுமார்
மேயர் பிரியாராஜன்
ப.தாயகம்கவி எம்.எல்.ஏ அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ
நன்றியுரை : த.பிரகாஷ்குமார்
87வது வட்ட கழக செயலாளர்
Star Digital
044 - 43 55 48 47
அன்புடன் : அம்பத்தூர் தெற்கு பகுதி - சென்னை கிழக்கு மாவட்டம்



ஒடுக்கப்பட்ட மக்களின்
ஒளி விளக்காம், தியாகி.

# இம்மானுவேல் சேகரனாருக்கு மணிமண்டபம் அமைக்க உத்தரவிட்ட

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்களுக்கு நன்றி.. நன்றி.. நன்றி...

**என்றென்றும் நன்றியுடன்...**

திரு. **ஏ.கே.எஸ்.விஜயன்** BA.,
தமிழ்நாடு அரசு டெல்லி சிறப்பு பிரதிநிதி.

திருமதி. **கயல்விழி செல்வராஜ்** M.Com., B.Ed.,
ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்.

திருமதி. **ர.தமிழரசி** B.Com.,
மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர்,
மாநில மகளிர் அணி இணைச் செயலாளர்.

திரு. **தனுஷ் எம் குமார்** B.Sc.,Agri MP.,
தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர்,
விருதுநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்.

திரு. **செ.ஸ்டாலின் குமார்** BE.,
துறையூர் சட்டமன்ற உறுப்பினர்.

திரு. **ஆ.வெங்கடேசன்** BA.,
சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர்,
மதுரை வடக்கு மாவட்ட துணை செயலாளர்.

திரு. **செ.சண்முகையா** BA., BL.,
ஓட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர்,
ஓட்டப்பிடாரம் மேற்கு ஒன்றிய செயலாளர்.

திரு. **செ.முருகேசன்**
பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர்,
மாவட்ட பொருளாளர்.

திருமதி. **க.சிவகாமசுந்தரி** MA.,BL.,
கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர்,
தலைமை செயற்குழு உறுப்பினர்.

திரு. **ராஜா ஈஸ்வரன்** MA.,BL.,
சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர்,
தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர்.



மணமக்கள்

**ர.பிரபாகரன் B.E., MBA.,**

**இரா.இந்துஜா B.E.,**

நாள் : 16.09.2023 சனிக்கிழமை.

இடம் : கலைஞர் அரங்கம், ராஜலட்சுமி திருமண மண்டபம் எதிரில், தொண்டாமுத்தூர்.





எங்கள் மகன்
திருமண வரவேற்பு
விழாவிற்கு வருகை தரும்

மாண்புமிகு **உதயநிதி ஸ்டாலின்** அவர்களையும்

கழக இளைஞர் அணி செயலாளர்,
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்

அமைச்சர் பெருமக்கள், மாவட்ட கழக செயலாளர்கள்,
சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,
கழக நிர்வாகிகள், கழக உடன் பிறப்புக்கள்
மற்றும் **நண்பர்கள் உறவினர்கள்**

அனைவரையும் வருக! வருக!! என அன்புடன் வரவேற்கிறோம்.

**தொண்டாமுத்தூர் அ.ரவி**
கோவை வடக்கு மாவட்ட செயலாளர்

**கமலம் ரவி**
பெருந்தலைவர், தொண்டாமுத்தூர் பேரூராட்சி